www.tamilarangam.net

# தலித்தியம் தமிழியம் இந்தியம்

தணிகைச்செல்வன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலித்தியம்
# தமிழியம்
# இந்தியம்

தணிகைச்செல்வன்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

பல்கலைப் பதிப்பகம்
36, தெற்குச் சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை–600 024.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூல் குறிப்புகள்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தலித்தியம் - தமிழியம் - இந்தியம் |
| நூலாசிரியர் | : | தணிகைச் செல்வன் |
| பொருள் | : | கட்டுரைகள் |
| வெளியீடு | : | பல்கலைப் பதிப்பகம், 36, தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம். சென்னை-600 024. |
| பதிப்பு ஆண்டு | : | முதல் பதிப்பு ஜூன் 1998 |
| உரிமை | : | ஆசிரியர்க்கு |
| நூல் வடிவம் | : | 1×8 கிரவுன் |
| அச்சுத்தாள் | : | 10.5 கி.கி. வெள்ளைத்தாள் |
| எழுத்துகள் | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 92+iv = 96 |
| நூல் கட்டு | : | சாதா அட்டை — செக்ஷன் |
| **விலை** | : | ரூ. 20-00 |
| அச்சிட்டோர் | : | அலைகள் அச்சகம், 36, தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை 600 024. |

---

**கிடைக்குமிடம்**

தமிழியம்
2/89, இரண்டாவது முதன்மைச் சாலை,
சுப்பிரமணிய நகர்,
மூவரசம் பேட்டை,
சென்னை - 600 091.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சில சிந்தனைகள் ...

திருமதி. ப. சிவகாமி I. A. S.

1982இல் 'சமூக சேவகி சேரிக்கு வந்தாள்' என்ற புத்தகம் தொடங்கி, கவிஞர் தணிகைச் செல்வன் அவர்களின் எல்லா கவிதைத் தொகுதிகளையும் வாசித்துள்ளேன். அவர் மீதும் அவரது குடும்பத்தார் மீதும் மிக்க மதிப்பும் நட்பும் கொண்டுள்ளேன். அவரது நூலுக்கு முன்னுரை எழுதுவதை பெருமையாகக் கருதுகிறேன். அவரது கருத்துக்கள் எப்போதும் சிந்தனைக்குரியனவாக இருக்கின்றன. பொதுவுடைமைக் கருத்துக்களோடு தமிழ்த் தேசியம், சாதி ஒழிப்பு இவற்றை முதன்மைப்படுத்தி ஆரம்பத்திலிருந்தே எழுதிக்கொண்டு வந்தாலும் சமீப காலமாக அவை பற்றி ஆழமுடனும் ஆர்வத்துடனும் சிந்தித்தும் எழுதியும் வருகிறார். பொதுவுடைமைக் கட்சியினரின் கூட்டங்களிலும் இலக்கியக் கூட்டங்களிலும் தமிழ்த்தேசியம், சாதி ஒழிப்பு ஆகியவை குறித்து வலியுறுத்திப் பேசிவருகிறார். ஏற்கெனவே தலித் இலக்கிய இதழான கோடாங்கியிலும் மற்றும் தமிழர் கண்ணோட்டம் போன்ற சிற்றிதழ்களிலும் வெளிவந்துள்ள கட்டுரைகள், இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பார்ப்பனீயத்தின் இன்றைய முகங்களாக வெளிப்படுபவை

—இந்திய ஒருமைப்பாடு / இந்திய தேசியம்

—சமஸ்கிருதம் / இந்தியை தேசிய மொழியாக முன்மொழிதல்

www.tamilarangam.net



—அரசு / கல்வி நிலையங்களில் தகுதி / திறமை அடிப் படையில் நியமனம் / வாய்ப்பை வலியுறுத்துதல்

—உலகமயம், தாராளவாதம் இவற்றை இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன் வைத்தல்

—மேற்கத்திய பண்பாட்டுச் சீர்குலைவுக்கு எதிராக/ தீர்வாக மதவாதத்தை முன்மொழிதல்

மேற்கண்டவற்றை வலியுறுத்துவதன் மூலம் தனது மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்வதே பார்ப்பனீ யத்தின் நோக்கம். இவற்றை விளக்குவதையும், இவற்றுக் கெதிரான அரசியல் செயல்பாடுகளைத் தூண்டுவதையும் தணிகைச் செல்வனின் கட்டுரைகள் / கவிதைகள் நோக்க மாகக் கொண்டுள்ளன. தனது கருத்துக்களை ஆணித்தர மாக வலியுறுத்தும் அதே சமயம், இன்னும் செழுமைப் படுத்தவும், வலுவூட்டவும், அதிக அளவில் எழுதவும் ஆதரவாளர்களை நோக்கி அழைப்பு விடுத்துள்ளார். ஏற்கெனவே பெறப்பட்ட விமரிசனங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் அடிப்படையில் புதிய கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன.

தொலைவில் உள்ள லட்சியத்திற்காக சில இடைக்கால நடைமுறைகளைப் பரிசீலிக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் அவை குறைந்தபட்சம் லட்சியத்தை நோக்கியா வது நடைபோட வேண்டும். தணிகைச் செல்வன் அவர் கள் கூறுவது போல ''தலித்துகள் தலித் உணர்வு கொள்ளட்டும்; தலித் அல்லாதார் தலித்துக்காக உணர்வு கொள்ளட்டும்; செயற்களத்தில் இரண்டும் சங்கமித்து சமூகப் புரட்சியில் வெல்லட்டும்.''

10-5-98
டோக்கியோ
ஜப்பான்

அன்புடன்
சிவகாமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முன்னோட்டம்

'இந்தியத் தேசியம்' என்ற பொருளில் இந்தியம் என்ற சொல்லும், தமிழ்த்தேசம்—மொழி—இனம் இவற்றின் உரிமைக் கோட்பாட்டைத் 'தமிழியம்' என்ற சொல்லும், தலித் மக்களின் விடுதலைச் சித்தாந்தத்தைத் 'தலித்தியம்' என்ற சொல்லும் உணர்த்தி நிற்கின்றன.

தலித்தியம் தமிழுக்கு அந்நியம் என்று கருதுபவர்களைப் போன்றே, தலித்தியம் மார்க்சியத்துக்குஎதிரானது என்று நம்புகிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

வர்க்கங்களாக மட்டுமே சமூகப் பிரிவுகளைப் பார்க்கப் பழக்கப்படுத்தப்பட்டுவிட்ட 'ஆசார' மார்க்சியப் பயிற்சியின் காரணமாக சாதியம், தலித்தியம் இவற்றின் ஊடே தமிழ்த்தேசியம் என்று சிக்கலாகிக் கிடக்கும் சமூக அடித்தளத்தைப் புரிந்து கொள்வது பெரும்பாடாகிவிட்டது—மார்க்சிய சித்தாந்திகளுக்கு.

சாதிகளுக்கிடையிலான உறவுச் சிக்கலைப் புரிதலும், அந்தச் சிக்கல்களுக்கிடையே தெளிவுகளைத் தேடலும்—ஆகிய கடின ஆய்வுகளுக்கான பொறுப்புணர்ச்சியும், பொறுமை உணர்ச்சியும் அரிதாகிவிட்டதால், 'சாதியப் பிரச்சினைகளுக்குச் சட்டரீதியான தீர்வே சரி'—என்று ஒரு சார்பிலும், 'வர்க்கப் புரட்சிக்கு உட்படுத்தி விட்டால் சாதிப்பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்துவிடும்'—என்று இன்னொரு சார்பிலும் கருத்துகள் எழுவது இயல்பாகிவிட்டது.

ஃ ஃ ஃ

www.tamilarangam.net

## 2

'மார்க்சியம் என்ன இதற்கெல்லாம் மாமருந்தா?' எனக் குத்தலாகக் கேட்கப்படலாம். இல்லை தோழர்களே இல்லை; மார்க்சியம் சர்வரோக நிவாரணி என்று சிலர் நிறுவ முயன்றதன் விளைவுதான், பல அறிவு ஜீவிகள் அதற்கு அந்நியமாகிப் போனதற்குக் காரணம். மார்க்சியம் மருந்தல்ல; மருந்துக்கு வழிகாட்டி.

மார்க்சியம் தீர்வைத் தருவதில்லை; ஆனால் ஒரு பார்வை தருகிறது. அந்தப் பார்வை தீர்வைத் தேர்வு செய்யத் திறன் பெற்றிருக்கும். ஆகவே மார்க்சியம் இலக்கல்ல; இலக்கைச் சுட்டும் திக்கு.

இந்தப் புரிதலோடுதான் தலித்தியத்தையும், தமிழ்த் தேசியத்தையும் ஜனநாயகப் புரட்சியின் அடித்தளக் கூறுகளாக்கும் சிந்தனைக்கு என் பங்களிப்பை இதில் முன்மொழிந்திருக்கிறேன்.

தலித் இயக்கங்களை நுண் அரசியலோடு சமப்படுத்திப் பார்க்கிறவர்கள், சமூக மாற்றத்தில் நுண் அரசியலுக்கான இடம்—பங்கு பற்றியும் சிந்திக்கவேண்டும். நுண் அரசியல் சக்திகள் சமூக மாற்றத்தில் பங்கேற்பது என்பது அவை தம்மைப் பேரரசியலுக்கு ஆட்படுத்திக் கொள்வதில் சென்று முடியுமோ என்ற அச்சம் தேவையில்லை.

தன் சொந்த ஆள் பலம்— ஆன்மபலம் காரணமாகத் தலித்தியம் தன் சிறுபான்மைத்தன்மையையும் மீறி ஒரு ஆற்றல்வாய்ந்த ஆகர்ஷண மையமாகத் திகழமுடியும்.

இதை நம் கண் எதிரில் நடத்திக் காட்டியவர் கன்ஷிராம். உத்திரப் பிரதேசத்தில் ஆதிக்கம் புரிந்த பார்ப்பனீய மேலாண்மையை வீழ்த்தி, தலித் ஒற்றுமை என்ற வலுவான அடித்தளத்தைக் கட்டமைத்து அந்த ஈர்ப்பு மையம் மூலமாகப் பிற்பட்டோர், சிறுபான்மையோர், ஆகிய சமூகங்களைத் தன் அரசியலுக்குள் அணி

www.tamilarangam.net



வகுக்கச் செய்த தலித்தியத்தின் வீச்சு சாமானியமான தல்ல...

சரியான சித்தாந்த அஸ்திவாரமின்மையால் நேர்ந்த நடைமுறைக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டுவிட்ட கன்ஷிராமின் தலித் இயக்கம், இன்றும் தன் வாக்கு வங்கியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது என்பதையும் சமூக ஆய்வாளர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டிலும் அத்தகைய தலித் வீரியத்தையும், வீச்சையும் கட்டவிழ்த்து வெளிப்படுத்தியதில் வெற்றி கண்டுள்ள டாக்டர் கிருஷ்ணசாமியின் 'புதிய தமிழகம்', தென் தமிழகத்தின் மள்ளர்களை (பள்ளர்கள்) அணி திரட்டுவதில் ஈட்டியுள்ள கணிசமான சாதனையைக் கணக்கிலெடுக்கத் தவறக்கூடாது. வட தமிழகத்தின் ஆதி திராவிடர்கள் (பறையர்கள்) பிற பகுதியிலுள்ள அருந்ததி யர்கள் (சக்கிலியர்) மற்றும் ஆதிக்குடிகள் ஆகிய தாழ்த்தப் பட்ட சமூகங்களையும் தம் புதிய தமிழகத்தில் இணைத்து ஒன்றுபடுத்தினால் கிடைக்கக்கூடிய பலமான அடித்தளம் தான், பிற்பட்டோரையும், மிகப் பிற்பட்டோரையும், இஸ்லாமியரையும், கிறிஸ்துவரையும் இதர ஒடுக்கப்பட்ட தமிழர்களையும் அணிதிரட்டும் குவி மையமாகச் செயல் படும்.

தலித்துகளின் சிறுபான்மைத் தன்மை என்ற வேலியை உடைத்துக்கொண்டு கிட்டும் இந்த வீச்சும் வெற்றியும்தான் பேரரசியலில் தன் பாதிப்பை நிகழ்த்தி, அதைத் தன் அரசியல் நோக்கங்களுக்கு உட்படுத்தும் ரசவாதத்தை நுண் அரசியலால் சாதிக்க முடியும்.

ஒரு தேசத்தில் சிறுபான்மையாக உள்ள பாட்டாளி வர்க்கம், தன் தத்துவத்தாலும், ஒருமைப்பாட்டாலும், போர்க்குணத்தாலும், ஸ்தாபனக் கட்டமைப்பாலும், பிற

www.tamilarangam.net



நேர வர்க்கங்களை ஒன்றிணைத்து ஜனநாயகப் புரட்சிக்கான அணிவகுப்பை உருவாக்கி வெற்றி காண்பது சாத்தியம் என்பது மார்க்சியத்துக்கு உடன்பாடு என்றால்,

சமூகப் புரட்சியிலும் அது சாத்தியம் என்பதைத் தலித்தியம் நிகழ்த்திக் காட்டும்.

ஃ ஃ ஃ

தலித் இயக்கங்கள், நுண் அரசியலின் வெளிப்பாடாகப் பார்க்கப்படுவது போலவே, பெண்ணியம், தலித்தியம் ஆகியவை பின் நவீனத்துவத்தின் குறிப்பீடுகளாகக் கருதப்படுகின்றன.

ஒருமையை எதிர்க்கும் பன்மை, முழுமையை மறுக்கும் துண்டுகள் (Fragmentations) ஆகிய அளவீடுகளுக்குப் பொருந்தக்கூடியதாகத் தலித்தியத்தைப் பார்ப்பதில் பிழை இல்லைதான். அனைத்தையும் கேள்விக்குள்ளாக்கும் தர்க்கச் செயல்பாடுகளால் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் பின் நவீனத்துவம்,

—துண்டுகள் சிதறி மேலும் துண்டுகளாவதையோ, அல்லது துண்டுகள் இணைந்து முழுமையாவதையோ, அல்லது துண்டுகளின் கூட்டமைப்பில் ஒரு புதிய கூட்டொருமை கிட்டுவதையோ,— அதாவது இத்தகைய சமூகப் போக்குகளைப் பின் நவீனத்துவம் எப்படிப் பார்க்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை.

தேசியம் நவீனத்துவம் என்றால், தலித்தியம் பின் நவீனத்துவம் என்று என் புரிதலுக்கேற்ப நான் விளங்கிக் கொள்கிறேன். தலித்தியம் தேசியத்தைப் பாதித்து, தலித்தியத்தின் ஆளுமைக்குட்பட்ட தமிழ்த் தேசியம் அமைவது என்ற ஒரு புதிய சமூகப் பரிமாணம் நேரும்போது பின்நவீனத்துவத்தால் அது எப்படிப் பரிசீலிக்கப்படும் என்பதும் எனக்குத் தெரியாது.

www.tamilarangam.net



எனினும் எனக்குத் தெரிந்த ஒரு எளிய கேள்வி: கருத்து (Thesis) எதிர்க்கருத்து (Anti Thesis) கூட்டுக் கருத்து (Synthesis) என்ற இயக்கவிதி நுண் அரசியலுக்கும், பின் நவீனத்துக்கும் கூடப் பொருந்தக் கூடியதுதானே?

ஃ ஃ ஃ

வர்க்க முன்னணி— சமூக முன்னணி— தமிழ்த் தேசிய முன்னணி—

என மூன்று அணிகளைப் பற்றி இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன்.

வர்க்க முன்னணியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை உறுதி செய்யப்பட வேண்டும், என்ற மார்க்சியப் பார்வையைச் சமூகத் தளத்தில் பொருத்தும்போது, சமூக முன்னணியில் தலித்துகள் தலைமைப் பெற்றாக வேண்டும் என்பது தர்க்க ரீதியான முடிவு.

'வர்க்கம் இழத்தல்' (Declass) என்பதை இடைக்கால நோக்காகவும் 'வர்க்கம் ஒழித்தல்' (No class) என்பதை இறுதி இலக்காகவும் கொண்டதுதான் வர்க்க முன்னணி. அதேபோல் 'சாதி இழத்தல்' (De caste) என்பதை இடைநிலைக் குறிக்கோளாகவும் 'சாதி ஒழித்தல்' (No caste) என்பதை இறுதிக் குறியாகவும் கொண்டதுதான் சமூக முன்னணி அல்லது தலித் முன்னணி.

ஒப்பீட்டு வசதிக்காகத் தரப்பட்ட இந்த விளக்கத்தில் விடுபட்டுப்போன அல்லது தெளிவு படுத்தப்படாத ஒரு கருதுகோள் பற்றி மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

வர்க்க முன்னணியில் 'பாட்டாளி வர்க்கத் தலைமை' என்று பொதுவாகக் குறிக்கப்பட்டாலும், 'தலித் பாட்டாளிகளின் தலைமை' அல்லது 'தலித் நேயப் பாட்டாளிகளின்

www.tamilarangam.net


தலைமை' என்று அர்த்தப்படுத்திக் கொள்வதுதான் என் கருத்தை முழுமையாகப் புரிந்துகொண்டதாகும்.

சாதி இழத்தல்— சாதி ஒழித்தல், நோக்கங்கள் வர்க்க முன்னணியின் வேலைத் திட்டத்தில் இடம் பெறாமல், வர்க்க அணியின் புரட்சிப்பணி முழுமை பெறாது. திட்ட அமலாக்கத்துக்கான உத்தரவாதம், அந்த அணித் தலைமையின் வர்க்க ஈடுபாட்டை மட்டும் அல்ல— சமூக அக்கறையைப் பொறுத்தே அமையும். தலித் பாட்டாளி அல்லது தலித் உணர்வு பெற்ற பாட்டாளி வர்க்கத் தலைமைதான் வர்க்க அணிவகுப்பிலும், சமூக முன்னணியின் நோக்கங்களை உறுதிப்படுத்துவதற்கான உத்தரவாதமாக அமையும்.

தலித்துகள்— சமூக அணித் தலைமையிலும்
தலித் பாட்டாளிகள்— வர்க்க அணித் தலைமையிலும்

தலித் தமிழர்கள்— தமிழ்த் தேச முன்னணித் தலைமையிலும் பொறுப்பேற்கும் போதுதான், தலித்— தமிழ்— பாட்டாளிகள் விடுதலை முப்பரிமாணப் புரட்சியில் முழுமை பெற்ற விடுதலையாகத் திகழும்.

இதைப் படித்து முடிக்கும் முன்பே, 'இது சாத்தியமில்லை' என்று நிராகரிப்பது சுலபம். ஆனால் இதைச் சாத்தியப்படுத்தத் தலித்துகளுடன் இணைந்து, தலித் அல்லாத அரசியல், சமூக, பண்பாட்டு இயக்கங்கள் எந்த அளவு முனைப்புடன் முன் வருகின்றன என்ற கேள்விக்குள்தான், தலித் அல்லாத தமிழ்ச் சமூகங்களின் விடுதலையும் அடங்கியிருக்கிறது என்பதைச் சரித்திரம் பதிவு செய்யக் காத்திருக்கிறது.

⁂ ⁂ ⁂

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் விவாதத்துக்காக 1994ல் எழுதப்பட்ட கட்டுரைதான் 'தலித்தியம்— தமிழியம்— இந்தியம்'. பின்னர் அது சகோதரி சிவகாமி

www.tamilarangam.net


அவர்களால் 'கோடாங்கி' இதழில் 'தலித் தமிழ்ப் பாட்டாளி' என்ற தலைப்பில் வெளியிடப் பட்டது.

அதே ஆண்டு 'தமிழர் கண்ணோட்டம்' இதழில் வெளிவந்த கட்டுரையே 'பார்ப்பனீயமே பாரதத் தேசியம்'.

'இனி'— இதழுக்காக எழுதப்பட்ட கட்டுரை 'முட்டையில்கூட முடி வளரலாம்'.

பெரியார் திராவிடர் கழகம் சென்னையில் நடத்திய 'சுதந்திரப் பொன்விழா' விமர்சனக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கவிதை 'போர் முனையும் வாள் முனையும்' இதன் ஒரு பகுதியை 'நந்தன்' இதழ் வெளியிட்டது.

நன்றி : முன்னுரை தந்த சிவகாமி அவர்களுக்கும் அலைகள் அச்சகத் தோழர்களுக்கும் மற்றும் நூலுக்கு உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும்.

**—தணிகைச் செல்வன்**

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலித்தியம் - தமிழியம் - இந்தியம்

## வர்க்கம் — இனம் — சாதி

தன்னிடம் பறித்தவற்றைப் பறித்தெடுக்கும் தேவையும் முனைப்பும் பறிகொடுத்த வர்க்கத்துக்கே இருக்க முடியும். எனவேதான் மற்ற வர்க்கங்களைப் பார்க்கிலும், இழப்பதற்கு ஏதுமில்லாத பாட்டாளி வர்க்கம், தன் விடுதலைக்கான வர்க்கப்போரில் முதன்மையும் தலைமையும் பெறத் தகுதி பெற்றதாகிறது. பறிபோனவற்றை அந்த வர்க்கம் மீட்டெடுக்கும் நிகழ்ச்சியே புரட்சி.

உற்பத்தி சமூகத்தன்மை பெறுகிற எந்திரயுகத்தில் உற்பத்தி உடைமைகளும் சமூகத்தன்மை பெற்றாக வேண்டும் என்ற இயக்கவிதியை நிறைவேற்றும் வரலாற்றுப் பொறுப்பைப் பாட்டாளிவர்க்கம் சுமக்க வேண்டிய காரணம், உற்பத்தி உறவுகளில் அது வகிக்கின்ற உயிர்த்தலமான இடமேயாகும். எனவேதான் பொதுவுடைமைப் புரட்சியை மார்க்ஸ் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்றார்.

'கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு', லெனின் ஒரு பாஷ்யம் எழுதினார். அதுதான் 'அரசும் புரட்சியும்'. அதில் அவர் கூறிய கருத்து:

ஜனநாயகக் கட்டத்தில் புரட்சி ஜனநாயத் தன்மை பெற்றதாக இருக்கும். அதனால் அது ஜனநாயகப் புரட்சி. சோசலிசப் புரட்சி, பொதுவுடைமைப் புரட்சி ஆகிய படிகளுக்கும் முதற்படி ஜனநாயகப் புரட்சி. பாட்டாளி

www.tamilarangam.net



வர்க்கத்தின் தலைமையில் அதன் நேசவர்க்கமான விவசாயிகளைச் சேர்த்துக் கொண்டு ஒரு ஜனநாயகப் புரட்சி அணிவகுப்பைப் பாட்டாளி வர்க்கம் உருவாக்க வேண்டும். இந்த அணி ஆளும் வர்க்கமான ஏகபோகத்தை யும் அதன் நேச அணிகளையும் முறியடித்து ஆட்சி அதி காரத்தைக் கைப்பற்றும். ஜனநாயகப் புரட்சி முற்றுப் பெற்றதும் சோஷலிசப் புரட்சி தொடங்கும். சோஷலிசப் புரட்சியின் போது வர்க்க அணி சேர்க்கையில் மாற்றம் இருக்கும். எனினும் பாட்டாளி வர்க்கமே புரட்சியிலும் ஆட்சியிலும் தலைமை வகிக்கும். பொதுவுடைமைப் புரட்சி வெற்றி பெற்று நிலைநிறுத்தப்படும்வரை பாட்டாளி வர்க்கத்தின் தலைமை நீடிக்கும். அது ஒன்றுதான், சமூக மாற்றத்தை விட்டுக் கொடுக்காமல் சமரசப்படுத்தாமல் முன்னெடுத்துச் செல்வதற்கான வரலாற்றுக் கடமையை நிறைவேற்றும் உத்தரவாதம் கொண்டதாக இருக்கும்.

லெனினியத்தின் மறுபக்கம் தேசிய இனச்சிக்கல் குறித்த அவரது கருத்துகளே. தேசிய இனச் சிக்கலை ஜனநாயகப் புரட்சியின் பகுதியாகப் பார்க்கவில்லை என்பது லெனினி யத்தின் மிகப் பெரிய குறை. இனச்சிக்கலின் தீர்வு வழியா கத்தான் ஜனநாயக இயக்கம் தன் இலக்கை எய்த முடியும் என்று கம்யூனிஸ்ட்டாக இருக்கும் ஒரு காஷ்மீரியோ, பஞ்சாபியோ, அசாமியோ, தமிழனோ இன்று முடிவெடுத் தால் அது மார்க்சியத்துக்கு உகந்த முடிவாகவே இருக்கும். ஆனால் லெனினின் தொலைநோக்கில் இந்தியாவின் இனச் சிக்கல் ஏனோ தென்படவில்லை. பிரிட்டிஷ் ஆதிக்கத்தி லிருந்து இந்தியா முழுமைக்கும் கிடைக்கும் விடுதலையைத் தான், இந்தியாவின் தன்னுரிமை (Self-determination) என்று லெனின் கருதினார். இந்தியாவின் தேசிய இனம் 'இந்தியன்' - என்ற பார்வையில் பிறந்த பிழை அது. இந்தப் பிழையையே ஞானவாக்காக ஏற்றுக் கொண்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, 'இந்தியா தன்னுரிமை பெற்றுவிட்டதால் இந்தியத் தேசிய இனங் களுக்குத் தன்னுரிமை தேவை இல்லை' என்று தன்

www.tamilarangam.net



கட்சித் திட்டத்திலேயே திருத்தம் ஒன்றைச் சேர்த்த அபத்தம் நடந்தேறியது.

தேசிய இன எல்லைகளை உடைத்துக் கொண்டு ஏற்படும் வர்க்க ஒருமைப்பாடும், அதனடிப்படையில் உண்டாகும் இந்திய ஒருமைப்பாடும், இந்திய ஒருமைப்பாட்டுக்கு பின்னம் ஏற்படாத ஒரு இந்தியப் புரட்சியும்- இந்தக் கனவுகளெல்லாம் வரலாற்றை எதிர்த்திசையில் சுழல வைக்க முயலும் வக்கிரங்களே அன்றி வேறல்ல. இந்தியாவில் புரட்சியும், இந்தியாவின் ஒருமைப்பாடும் சேர்ந்து செல்வது இயலாது (Revolution in India and Integration of India cannot go together). 1952இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை அறிக்கையில் (statement of policy) இந்த உண்மை அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை எத்தனை கம்யூனிஸ்ட்டுகள் அறிவார்கள்? 1968இல் நக்சல்பாரி இயக்கத்தின் நெருக்கடிகளுக்கு விடை காண இயலாத மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பழைய கொள்கை அறிக்கையைத் தனது கொள்கை அறிக்கையாகக் கொச்சி மாநாட்டில் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை எத்தனை மார்க்சிஸ்ட்டுகள் அறிவார்கள்? அன்று ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு எதிராகவே இன்று வரை அக்கட்சி செயல்பட்டு வருகிறது என்பதை அதன் தலைவர்கள் எத்தனைபேர் இன்று ஒப்புக் கொள்வார்கள்? அந்த புதை பொருள் ஆய்வுக்கு. நாம் போகவிரும்பவில்லை

வர்க்கம், தேசிய இனம் என்ற பகுப்புகளை மீறி வேரோடி இருக்கும் சாதிகளின் படிநிலைக் கட்டுமானம் என்ற இந்திய விதைகள் குறித்தும், வேர்கள் குறித்தும், விழுதுகள் குறித்தும் முறையான, விரிவான ஆழமான ஆய்வுகள் இல்லாத நிலையில், மார்க்ஸ் இந்திய சமூகங்களின் வளர்ச்சியற்ற தேக்கநிலையை இதர ஆசிய சமூகங்களின் தேக்கநிலையோடு பொதுமைப்படுத்தி ஆசிய உற்பத்தி முறைபற்றி ஆய்ந்திருந்தார். இந்தியாவைப் பற்றிய அவர் குறிப்புகளில் கூட, இந்துமதம் அதன் விசித்திர வடிவ

www.tamilarangam.net



தெய்வங்கள், அவற்றின் செல்வாக்கு பற்றி அவருக்குக் கிடைத்த தகவல்களின் அளவுக்கு, சாதிகளின் சிக்கலான சமூக நெசவு பற்றி அவருக்குக் கிடைக்கவில்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளோ ஆசான்களின் வழிகாட்டுதல் இல்லாமல் ஆசாரங்களை மாற்றிக் கொள்ள இயலாதவர்கள். சாதிகளை சமூக-பொருளியல் உறவுகளோடு ஆய்வு செய்து, அது பற்றிய முடிவுகளைக் கட்சித் திட்டத்தில் இணைக்க வேண்டிய வரலாற்றவசியம் பற்றிச் சிந்திக்கக்கூடிய படைப்பாற்றல் மிக்க சமூக விஞ்ஞானிகள் கட்சிக்கு வெளியே இருந்தார்கள் அல்லது வெளியேற்றப் பட்டிருந்தார்கள்.

'மொழியைப் போலவே சாதியும் சமூகத்தின் மேல் அமைப்புதான் (super structure). நாளைய இந்தியப் புரட்சியின் பயங்கர அதிர்வில் இந்த மேலமைப்புகள் நொறுங்கித் துளாகிப்போகும்'- என்று குருட்டுத்தனமும், வறட்டுத் தனமும் சேர்ந்த ஒரு பழமைவாதமே சாதிகள் பற்றிய கம்யூனிஸ்ட்டுகளின் பார்வை ஊனத்துக்குத் தத்துவ அடித்தளமாயிருந்தது.

மொழியைப் போன்றே சாதியும் சமூகத்தின் அடித்தளப் பகுதியே (Basis) என்பதை ஏற்க விரும்பாத கட்சிகள் இன்றும் உண்டு.

'சாதிகளுக்கும் வர்க்க உள்ளடக்கம் உண்டு' என்று காலங்கடந்து எழுதிய 'இந்திய வரலாற்றில்' நம்பூதிரிபாடு உண்மையில் பாதியை ஒப்புக் கொண்டாலும், சாதியத்தின் உட்கருவாகச் செயல்படுவது பார்ப்பனியமே என்ற உண்மை அந்த நூலில் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

சாதியே இந்து மதத்தின் அஸ்திவாரம் என்பதும், இந்து மதத்தின் மூளையும், இதயமும் பார்ப்பனியமே என்பதும் ஏற்கெனவே தோலுரிக்கப்பட்டு விட்டன-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வடக்கே அம்பேத்கராலும், தெற்கே பெரியாராலும். நம்பூதிரிபாடின் நூல் இவர்களின் பங்களிப்பையும் அங்கீகரிக்கவில்லை.

சாதிப்படிநிலைகளோடு வர்க்கப் படிநிலைகள் பெரும்பாலும் பொருந்துவன எனினும், வர்க்க அடுக்குகளைத் தாண்டி சமூகத் தளத்தில் சாதியின் வேர்கள் ஊடுருவி ஆழப்பதிந்து நிலைகொண்டு விட்டன. எனவே வர்க்கங்கள் மறையும் போது சாதியும் மறையும் என்ற யந்திரத்தனமான வாய்ப்பாடு மார்க்சிய விரோதமானது, என்பதை இன்னும் பொதுவுடமைக் கட்சிகள் ஒப்புக் கொள்ளத் தயங்குகின்றன. இந்தத் தயக்கம்தான் அவைகளை மண்டல் இயக்கத்திலும், பெரியார் இயக்கத்திலும், அம்பேத்கர் இயக்கத்திலும் பங்கேற்க இயலாதவாறு தடுக்கிறது; அல்லது ஒப்புக்கு மாரடிக்கச் செய்கிறது.

## வர்க்கப் போர்த்தலைமை

தொழில்துறைப் பாட்டாளிவர்க்கம் போதிய வளர்ச்சியுறாத சீனம், வியட்நாம், கொரியா ஆகிய நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் வர்க்கப்போரில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்றுக் கொண்டமைக்கு காரணம், அந்த வர்க்க மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அல்ல; தகுதியின் அடிப்படையில்தான்.

பாட்டாளி வர்க்கம் அல்லாத ஒரு வர்க்கத்திலிருந்து வர்க்கப் போருக்குத் தலைமை தாங்க ஒருவர் பெற வேண்டிய தகுதி என்ன? அவரது படிப்பு, மேதாவிலாசம், வெகுஜன செல்வாக்கு இவைகளா? இல்லை; இவை எதுவுமில்லை, மாறாகத் தான் சார்ந்த வர்க்கத்தின் பண்புகளை முற்றாகத் துறந்துவிட்டு பாட்டாளி வர்க்க நலனுக்குத் தனது நலன்களை உட்படுத்திக்கொள்ளவும், அதற்காக உயிரையே இழக்கவும் துணிந்து நிற்கும் தியாகப் பண்பு தான் பாட்டாளி வர்க்கக் கட்சியில் பங்கேற்கவும் தலைமையேற்கவும் தேவையான ஒரே தகுதி. இந்தப் பண்பின்

www.tamilarangam.net


காரணமாகத்தான் மார்க்சையும், ஏங்கல்சையும், லெனினையும், மா-சே-துங்கையும் தமது வர்க்கத்தலைவர்கள் என்று பாட்டாளிகள் ஏற்றுக்கொண்டார்கள்.

வர்க்கம் இழத்தல் (Declass) என்ற இந்தப் பண்பு மாற்றம் பாட்டாளி அல்லாத வர்க்கத் தோழருக்கு நூறு சதம் வாய்க்கப் பெறுவது அரிதுதான். பிறந்த வர்க்கப் பண்பு களைவுக்கான போராட்டத்தில் ஒருவர் தொடர்ந்து ஈடுபடாமல் அது சாத்தியமில்லை. வர்க்கக் களைவு என்பது தேள் தன் கொடுக்கை இழப்பதற்கு ஒப்பாகும். இது ஒரு அக்கினிப் பரீட்சை.

ஆனால் அதே சமயத்தில் ஒரு அசலான பாட்டாளி வர்க்கப் போராளி புரட்சிக்குத் தலைமை தாங்கும் தகுதியைப் பெறுவது இயல்பானதாகவும் இயற்கையானதாகவும் ஆகிவிடுகிறது. Declass ஆதல் என்ற 'தோலுரித்தல்' சோதனை அவருக்கில்லை. கருப்பர்களின் நிறப் போரில் கருப்பர்களே தலைமையேற்பது எவ்வளவு இயல்பானதோ அவ்வளவு இயல்பானதாக இதுவும் அமையும். தாம் பிறந்த நிறப்பண்பை இழந்து கருப்பர் நலனுக்குப் போராடும் வெள்ளையர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் விதிகளல்ல; விதிவிலக்குகள்.

## இனப்போர் தலைமை

இந்த மார்க்சிய வெளிச்சத்தில்தான் தேசிய இனப் போரும் பார்க்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசத் தன்னுரிமைப் போருக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டியவர்கள் தமிழர்களே என்பதிலும் அந்தப் போரில் தலைமையேற்க வேண்டிய தளநாயகர்களுக்கான அடிப்படைத் தகுதி, அவர்கள் தமிழர்களாக இருக்கவேண்டும் என்பதிலும் இரண்டு கருத்து இருக்க முடியாது. தமிழரல்லாதார் தமிழினப் போரில் பங்கேற்கக் கூடாதா? அப்போரின் தலைமையில் பொறுப்பேற்கக் கூடாதா? கூடும்; இதிலும் விதிவிலக்குகள் இருக்கக்கூடும்.

www.tamilarangam.net



வீட்டில் வேறு மொழி பேசினாலும், வெளியில் தமிழராக வாழ்கிற குடும்பங்கள் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் செரிமானமாகித் தமிழர்களாகப் பரிணாமம் பெறுகிற வாய்ப்புகளே இன்று வலுவாக இருப்பதால், தமிழ்த் தேசிய இன உருவாக்கத்தில் வீட்டு மொழித் தடைகள் வரப்புகளாக இருக்குமே ஒழிய, மதில்சுவர்களாக நின்று தடுக்க வாய்ப்பில்லை. இந்த வகையில் தமிழ்நாட்டின் உட்பகுதியில் வாழ்கின்ற தெலுங்கர்கள், கன்னடர்கள், மலையாளிகள், சவுராஷ்டிரர்கள், உருதுபேசும் இஸ்லாமியர்கள் போன்றோரில் இன்று தமிழ் மொழிக்காகவும், தமிழர் உரிமைக்காகவும் போராடும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை நாமறிவோம். எனவே இவர்கள் வேற்றினமல்ல; தமிழனமே!

தேசிய இன எழுச்சி என்ற ஜனநாயக இயக்கம் வேகமும், ஆழமும் விரிவும் பெறும்போது ஒடுக்கும் இனத்தின் மக்களிடமிருந்துகூட ஒடுக்கப்படும் இனத்துக்கு ஆதரவான சக்திகள் வெளிப்படக்கூடும். ரஷ்ய இனத்தவரான லெனின், ரஷ்யப் பேரின ஆதிக்கத்துக்கு எதிராகவும், ரஷியர்களால் ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு ஆதரவாகவும் போராடினார்— என்பது போன்ற ஆரோக்கியமான உதாரணங்களை, இந்தி ஆதிக்க வாதிகளிடம் இங்கே எதிர்பார்க்க முடியாது. இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகக் குரல் எழுப்பும் இந்தி மொழிக்காரர்கள் மிக அபூர்வமாகவே காணப்படுவார்கள்.

இந்த நிலையில் தமிழ்த்தேச தன்னுரிமைப் போரில் பங்கேற்கவோ, தலைமையேற்கவோ தகுதிபெற்ற 'இனக்களைவு' பெற்று ஜனநாயக முதிர்ச்சியுற்ற உத்தரப் பிரதேசக்காரரோ, மத்தியப்பிரதேசக்காரரோ, மார்வாடியோ, குஜராத்தியோ— இருப்பார்கள் என்று நம்ப முடியுமா?

தமிழ்த் தேசிய இன உருவாக்கம் முழுமை பெறுவதில் வீட்டுமொழித் தடைகளைக் காட்டிலும் சாதிகளின்

www.tamilarangam.net



தடைகளே வலுவாக உள்ளன. ஒவ்வொரு சாதியும் தன்னை 'இனம்' என்று கருதிக்கொண்டிருக்கும் நிலையில், சாதிகளை ஊடறுத்துத் 'தமிழ் இனம்' என்ற தேசிய ஒற்றுமையைக் கட்டுவதில் பெரும் சோதனைகளையும் போராட்டங்களையும் தமிழ்த் தேசிய இயக்கம் சந்தித்தாக வேண்டும்.

சாஸ்திரங்களின் மீதும், சனாதன தர்மத்தின் மீதும், சமஸ்கிருதத்தின் மீதும் வேர்விட்டு வளர்ந்திருக்கும் பார்ப்பனியத்தைக் களைந்துவிட்டு **De-Sanskritise** செய்து கொள்ளும் பார்ப்பனர்களும் தமிழர்களாகக் கருதப்படக் கூடியவர்களே எனினும் இந்தச் சாத்தியம் மிக மிக அபூர்வமான ஒன்று என்று கருதியதால் பெரியார், பார்ப்ப னர்களைத் தமிழர்கள் என்று ஏற்றுக்கொள்ள மறுத்தார். தமிழ்த் தேசத் தன்னுரிமைப் போர் முற்றி முதிர்வடைகிற நிலையில், அதன் வீச்சில் ஈர்க்கப்பட்டுப் பார்ப்பனர்களும் பூணூலையும், பார்ப்பனியத்தையும் துறந்துவிடும் பண்பு மாற்றம் நிகழக்கூடும். மானிடம் என்ற இலக்கு நோக்கி நகர்கிற வரலாற்றில் பார்ப்பனீயம் ஒரு நிரந்தர அம்சமாக நீடிக்க முடியாது.

எனவே ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் இன்று தன் விடுதலைக்குத் தானே முன்னணி அமைத்தாக வேண்டும். அந்த முன்னணிக்குத் தலைமையேற்பதும் தமிழர்களாகவே இருந்தாகவேண்டும். விதிவிலக்குகளால் விதிகள் தீர்மானிக்கப்படுவதில்லை.

## சமூகநீதிப் போர்த் தலைமை

வர்க்கவரிசைப் படிக்கட்டில பாட்டாளி வர்க்கம் அடிவாரப்படிக்கட்டாக இருப்பது போல,

ஒடுக்குமுறைக்காளாகும் இந்தியாவின் இனங்களை மொழிவழியாக நோக்கும்போது, வடமொழிச் செல்வாக் கிலும் இந்தி மொழிப் புழக்கத்திலும் கடைநிலையிலுள்ள

www.tamilarangam.net



தமிழே இந்தி ஆதிக்கத்தால் பெருமளவு பாதிக்கப்படுவது என்பதால் ஆதிக்கத் தேசியத்தின் அடக்குமுறைப் படிக் கட்டில் தமிழினம் கடைசிப் படிக்கட்டாக இருப்பது போல,

வர்ணசாதிப் படிக்கட்டில், ஒடுக்குமுறையில் கடை நிலைச் சாதியாக உள்ள தலித் சமூகமே அடிநிலைப் படிக் கட்டாக இருக்கிறது என்பதை நிறுவ பெரிய ஆய்வு தேவை இல்லை. 'இந்திய தரிசனத்தில்' முதல் பார்வையிலேயே இந்த முடிவு கிட்டிவருகிறது.

எனவே சமூக நீதிப் போரின் முதல் அணியில் தலித் துகளே நிற்பார்கள். தீண்டாமையை மையமாகக் கொண்ட அனைத்து ஒடுக்குமுறைகளையும் உடைத் தெறியும் சமூகப்புரட்சியின் இறுதி இலக்குவரை செல்லக் கூடிய தேவையின் உந்துதல் தலித் சமூகத்திற்குத்தான் உண்டு என்பதால் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான அணித் தலைமை தலித்துகளுக்கே உரியதாகும்.

வரலாற்று இயக்க இயலுக்கு நூறுசதம் பொருந்து வதும், இந்திய வேர்களோடு விளங்குவதுமான இந்த விதியை ஏற்கத் தயங்குகிறவர்களும் மறுக்கிறவர்களும் தலித் அல்லாதவர்களாக இருப்பதால், அவர்கள் வர்க்கப் போராளிகளாக இருப்பினும் அவர்கள் சாதியச் செல் வாக்குக்கு ஆட்பட்டுப் போயிருப்பதாக தலித்துகள் சந்தேகிக்க இடம் உண்டாகிறது.

வர்க்கப் போராட்டங்களையும் சமூக நீதிப் போராட் டங்களையும் தமிழ்த்தேசப் போருடன் உரியவகையில் இணைத்து நடத்தப்படும் ஒரு முப்பரிமாணப் புரட்சியே இந்த மண்ணின் சாரத்தை உள்வாங்கித் திரும்ப இந்த மண்ணுக்கே செழுமையூட்டுகிற—மக்களுக்கு விடிவைக் காட்டுகிற முழுப்புரட்சியாக இருக்கும். சமூக நீதிப் போராட்டங்களும் வர்க்கப் போராட்டங்களும் கை

www.tamilarangam.net



கோர்த்து முன்னேறித் தமிழினப் போரில் சங்கமிக்கும் போதுதான் தமிழ்த் தேசப் புரட்சியின் ஜனநாயகக் கட்டம் முற்றுப் பெறும்

தலித் புரட்சியாளர்கள் தலைமை தாங்குகிற தலித்-பிற்படுத்தோர்- சிறுபான்மையினர் இணைந்த சமூக நீதிப் போர் அணி பாட்டாளி வர்க்கத் தலைமையில் பாட்டாளிகள்-விவசாயிகள்-நடுத்தர மக்கள் சேர்ந்தமைக்கும் வர்க்கப் போர் அணி ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்த- தமிழ்த் தேசிய முன்னணிதான், வர்க்க- சமூக- தமிழ்த்தேச விடுதலைப் போரின் அணி வகுப்பாக இருக்கும்.

## இந்த முன்னணியின் போர்முனையில் நிற்கும் எதிரணி எது?

—பார்ப்பனீயச் சித்தாந்தத்தின் பாதுகாவலர்களும் ஆதரவாளர்களும்,

—ஏகபோகங்களும், நில உடைமை ஆதிக்கச் சக்திகளும் அவர்கள் சார்ந்திருக்கும் ஏகாதிபத்தியங்களும்,

—இந்தித் தேசியத்தின் பேரினவாதிகளும் இந்தியத் தேசியத்தின் ஆதரவாளர்களும்.

இந்த மூன்று பிரிவின் நலன்களும் ஒன்றுக்கொன்று ஒத்திசைவு கொண்டவை. இந்த நலன்களின் நாயகமே இந்திய அரசு; அவற்றின் குவிமையமே டெல்லி.

ஃ ஃ ஃ

பாட்டாளி வர்க்கத் தலைமைக்குத் தகுதி பெற மாற்று வர்க்கத் தோழர் வர்க்கக் களைவு (declass) பெற்றாக வேண்டும் என்பது போல,

www.tamilarangam.net



தமிழினப் போரில் தலைமையேற்கத் தமிழனல்லாதார் இனக்களைவு (Denationalise) செய்தாக வேண்டும் என்பது போல,

சமூக விடுதலைப் போரில் தலைமையேற்கத் தலித் அல்லாதார் தகுதிபெற சாதிக்களைவு (Decaste) செய்தாக வேண்டும் என்பது விதிவிலக்குகளை அனுமதிக்கும் விதி.

மக்களின் விழிப்புணர்வு ஒன்றுதான் இந்த விதியின் சரியான அமலாக்கத்துக்கு உத்தரவாதம். விழிப்புணர்வு அற்ற நிலையில் இந்த விதியே அந்த மக்களின் விலங்காகி விடும் என்பதே வரலாறு.

சமூக விடுதலைப் போரில், 'சாதி இழத்தல்' என்ற தகுதியைப் பெறுவதற்கான முன் நிபந்தனை பார்ப்பனீயம் இழத்தல் (De-brahminisation) என்பதாகும்.

வர்ணசாதிப் பிரிவுகளுக்கான சமூக அநியாயங்களுக்கு சாஸ்திர நியாயங்களை வழங்கிக் கொண்டிருக்கும் பார்ப்பனீயச் சித்தாந்தத்தின் உயிர்த்தலம், வேதங்களும், புராணங்களும், இதிகாசங்களுமே. அதன் உறைவிடம், பார்ப்பன குருபீடங்கள்; அதன் செயல்தளம்: இந்திய அரசும் பார்ப்பன அறிவு ஜீவிகளும்.

பார்ப்பனர்களால் பிரசவிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட பார்ப்பனீயத்தின் சாரம்: தீண்டாமை. பார்ப்பனர்களுக்குச் சூத்திரர்களும், பஞ்சமர்களும் தீண்டத்தகாதவர்கள்; சூத்திரர்களுக்கு பஞ்சமர்கள் தீண்டத்தகாதவர்கள். சாதி அடுக்குகளிடையே அகமண உறவுகளால் இந்தத் தீண்டாமை வேறு வடிவில் நிரந்தரப்படுத்தப் பட்டுள்ளது. ஏனைய அனைத்துச் சாதிகளாலும் தீண்டப்படாதவர்களாகத் தலித்துகள் தாழ்த்தப்பட்டார்கள்.

பார்ப்பனீயம் ஏற்றல் (Sanskritisation) என்ற இயக்கப் போக்கோடு பார்ப்பனீயமாதல் (Brahminisation) சம்பந்தப்பட்டது எனினும், அதன் மேட்டுக்குடித்தனத்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்றல்- மேனிலைப்படுதல் Sanskritisation என்ற பொருளிலும், அதன் சனாதனத்தை ஏற்றல் பார்ப்பனியமாதல் Brahminisation என்ற பொருளிலும் பாகுபடுத்திக் கொள்வது வசதியாக இருக்கும்.

பார்ப்பனர் அல்லாதார் பார்ப்பனீயர்களாகப் பரிணாமம் பெற்ற வரலாற்றில் வேளாளர்களே தலைமக்களாவர். இவர்கள் பார்ப்பனியமாதல், என்ற பண்புமாற்றப் போக்கில் சில அம்சங்களில் பார்ப்பனர்களையும் விஞ்சியவர்களாகத் தம்மைக் கருதிக் கொண்டவர்கள். பார்ப்பனீயச் செல்வாக்கை விரைவுபடுத்துவதிலும் நிலவுடைமையும் பொருளுடைமையும் புறக் காரணிகளாகச் செயல்பட்டன.

பிறப்பிலிருந்து இறப்புவரை மங்கல - அமங்கலச் சடங்குகள், சமூகச் சட்டங்கள், ஊர்க்கட்டுப்பாடுகள், சாதிக் கட்டுப்பாடுகள், வழக்காறுகள், திருவிழாக்கள் மற்றும் தினசரி வாழ்க்கையில் நல்ல நேரம் கெட்ட நேரம் பார்ப்பது உட்படப் பார்ப்பனீயம் நுழையாத இடமே இல்லை. பள்ளிக்கூட அறையிலிருந்து பள்ளியறை வரை, மணமேடையிலிருந்து மயானமேடை வரை தமிழனின் வாழ்வில் பார்ப்னீயம் ஆதிக்கம் பெறாத இடமோ, துறையோ, சமூகமோ எதுவுமில்லை. எனவே வேளாளர்களைத் தாண்டி வரிசைக் கிரமத்தில் உள்ள அத்தனைச் சாதியிலும் பார்ப்பனீயம் உண்டு; பார்ப்பனீயர்கள் உண்டு. விகிதாச்சாரம்தான் வித்தியாசப்படும்.

பார்ப்பனீயமாதலில் பெருமளவுக்குத் தப்பி நின்றிருப்பது தலித் சமூகம் மட்டுமே. வர்ண சாதி வரிசையில் தனக்கும் கீழ்ப்பட்டவர்களை ஒதுக்கும், ஒடுக்கும் வாய்ப்பு தலித்துக்கு இல்லை, என்பதே அடிப்படைக் காரணம். எனினும் தலித்துகளுக்குள்ளேயே உள்ள உட்சாதிப் பிரிவுகளுக்குள் பண்பாட்டுச் சிக்கல் இல்லாமல் இல்லை.

ஆனால் அது பார்ப்பனீயமாதல் என்ற போக்கோடு தொடர்புடையதாகத் தெரியவில்லை. பள்ளர்கள், பறையர்கள், சக்கிலியர்கள் மற்றும் ஆதிவாசிகள், மலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாசிகள், இவர்களின் உட்குழுக்கள் - ஆகிய தலித் பிரிவு களுக் கிடையே உள்ள சிக்கல்களில் பார்ப்பனீயக் கூறுகளை விட, மரபுக் கூறுகளும், பொருளியல் கூறுகளுமே முதன்மை யானவை என்று கருத இடம் உண்டு.

பார்ப்பனீயர்களைப் போலவே தங்கள் திருமணம் போன்ற சடங்குகளை நடத்திவைக்க தலித்துகளின் ஒரு பகுதியினர் 'வள்ளுவர்' என்று தங்கள் சமூகத்திலேயே ஒரு 'அய்யரை' நியமித்துக் கொள்கிறார்கள். அதைப் பார்ப்ப னீயமாதல் என்று சொல்வதற்கில்லை. பார்ப்பனீயத்தின் எதிர் விளைவு என்று கூறலாம். 'வள்ளுவர்' களுக்கும் பிற தலித்தினருக்கும் இடையே தீண்டாமையோ, பார்ப்பன சாஸ்திரத்தின் தாக்கமோ கிடையாது.

எனவே வரலாறும் இன்றைய வாழ்க்கையும் நமக்குத் தருகிற முடிவு; பார்ப்பனீய ஒழிப்புக்கும், சாதி ஒழிப்புக் கும், தலித்துகளே ஆதார சக்தியாக இருக்க இயலும். மிக மிகப் பிற்பட்ட சாதியினரிடம் கூட அந்தச் சாதிய அடை யாளம் ஒட்டிக்கொண்டிருக்கும். ஆனால் சாதியத்தின் எந்தக் கரும்புள்ளியும் இல்லாதவர்கள் தலித்துகளே. ஏனெனில் நால்வருண இந்துச் சாதிகளில் அவர்கள் எந்தச் சாதியிலும் சேராதவர்கள். சாதியிலிகள் (castless). வர்ணங் களுக்கு அப்பாற்பட்டவர்கள் (அவர்ணாக்கள்). எனவே தான் சமூக நீதிப் போரின் தலைமை தர்க்கரீதியாக தலித்து களிடம் தான் இருக்க வேண்டும் என்கிறோம்.

## தலித் ஒற்றுமை

சமூகப் புரட்சியில்—
சாதி ஒழிப்பு என்பது இறுதி நிலை
சாதிகளின் சமத்துவம் என்பது இடைநிலை.

வர்க்கப் புரட்சியில்—
வர்க்கங்கள் அற்ற சமுதாயம் இறுதி நிலை
வர்க்க பேதம் அற்ற சமுதாயம் இடைநிலை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனப்புரட்சியில்—
தேசத்தின் சுயநிர்ணயம் இறுதி நிலை
தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை இடைநிலை

பெண்ணியத்தில்—
பெண்கள் விடுதலை என்பது இறுதிநிலை
பெண்களுக்குச் சமத்துவம் என்பது இடைநிலை.

நமது அனைத்து இயக்கங்களுக்கும் இன்றைய இலக்கு 'இடைநிலையை' எய்துவதே.

சாதி ஒழிப்புதான் தலித்துகளின் சமூக லட்சியம் என்றாலும் அதை அடைய இரண்டு படிகள் உள்ளன.

தலித்துகளின் ஒற்றுமை என்பது முதல்படி; சாதிகளின் சமத்துவத்தை எட்டுவது அடுத்த படி. தலித்துகளின் உறுதியான ஒற்றுமையில் கிடைக்கும் நம்பகத்தன்மைதான், பிற்பட்ட சாதிகள் அதனால் ஈர்க்கப்படவும், தலித் அணியின் தலைமையை அவை விரும்பி ஏற்கவும், முடிவில் ஒரு சமூகப் புரட்சியில் அது முற்றுப் பெறவும் அடித்தளமாக அமையும். எனவே சமூகப் புரட்சியின் துவக்கப்புள்ளி தலித்துகளின் ஒற்றுமையே என்ற சத்தியத்தைத் தரிசிக்கிறோம்.

— தலித் ஒற்றுமைக்கான இயக்கம்

— தலித் - பிற்பட்டோர் - சிறுபான்மையினர் அணி சேர்க்கைக்கான இயக்கம்

— சாதிகளின் சமத்துவத்துக்கான இயக்கம் (கல்வி, வேலைகளில் இட ஒதுக்கீடு, கூலி உழவர்களுக்கு நிலப்பங்கீடு போன்றவை இந்த இயக்கத்தின் செயல் திட்டங்களாக இருக்கும்.)

— இறுதியில், சாதி ஒழிப்புக்கான இயக்கம் (அகமணங்களே இல்லாத நிலை; புறமணங்களில் சாதிகள் கரையும் நிலை; முடிவில் திருமணங்களே தேவைப்படாத

www.tamilarangam.net



புதிய சமூக உறவு நிலை; இந்த நிலையில் சாதிகளும் இல்லை, பெண்ணடிமையும் இல்லை!)

இந்த வரிசையில் நடக்கும் சமூகப் புரட்சி இயக்கத்தில் தலித்துகளின் பொறுப்பு எத்தனை தேவையானது, மகத்தானது, மையமானது என்பதற்குப் புதிய விளக்கம் தேவை இல்லை.

## தலித் உணர்வு

சாதி இழத்தலால் தலித்தோடு சமநிலை அடைவதுதான் தலித் அல்லாதார் சமூகப் புரட்சியில் பங்கேற்கும் தகுதியைப் பெறுவதற்காகச் செய்ய வேண்டிய சுய போராட்டம். தன் சாதி உணர்வை வென்றொழிக்கும் சுய பரிசுத்தப் போராட்டத்தில் இன்று ஏராளமான தலித் அல்லாத தோழர்கள் முன்னேறித் தலித் நலன்களுக்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சாதியிழத்தல் போராட்டத்தில் வென்றபின் தலித் போராட்டத்தில் ஈடுபடலாம் என்று காத்திருப்பது நடைமுறைக்கு ஒத்ததல்ல. தலித் போராட்டங்களில் பங்கெடுப்பதன் மூலம்தான் சுயபோராட்டத்தில் வெல்ல முடியும் என்பதே சாத்தியமான சமூகப் பாதை. இது காங்க்ரீட் பாதையல்ல, காட்டுப்பாதை என அறிந்தே ஏற்றுக்கொண்ட ஆயிரமாயிரம் இளைஞர்கள்தாம் நாளைய வைகறையை ஈன்றெடுப்பார்கள்.

இந்த இடத்தில் தலித் அல்லாத தோழர்களுக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். சாதியிழத்தலால் தலித்தோடு சமநிலை அடைவதென்பது இயலக்கூடியது; தலித் நிலை அடைவதென்பது இயலாதது. 'தலித்துக்காக வாழ்வேன்' என்பது இயலக்கூடியது; 'தலித்தாக வாழ்வேன்' என்பது இயலாதது. தலித் அல்லாத தோழர் மலம் அள்ளவும், பிணம் எரிக்கவும் முன் வரக்கூடும். அதனாலெல்லாம் அவர் தலித்தாகி விட முடியுமா? முடியாது.

www.tamilarangam.net



ஏனெனில், தலித்தை இன்று அடையாளப்படுத்தும் சேரி, சகதி, கந்தல், கஞ்சி, குடிசை, குப்பை, அழுக்கு, அழுகை, சண்டை, சாராயம், மலம், பிணம், மாடு என்ற புறநிலைகள் தற்காலிகமானவையே. இந்த நிலைகள் மாறும்; மாற்றப்பட வேண்டும். இவையெல்லாம் அகற்றப் பட்டுவிட்டால் தலித் அடையாளம் அகற்றப்பட்டதாகி விடுமா? ஆகாது. இறுதிப் பரிசீலனையில், தலித் அடையாளம் தலித்திடம் இல்லை; அது தலித்துக்கு வெளியே இருக்கிறது என்பதே உண்மை.

உயர்குடிப் பிறப்பாளர்களோடு சமமாக அமர்ந்து உயர்ந்த பதவி வகித்தால்கூட, தலித்தைப் பள்ளனாகவும், சக்கிலியாகவும், பறையனாகவும் மட்டுமே பார்க்கும் பிறசாதியினரின் சமூக மதிப்பீடுதான் தலித் அடையாளம். அந்த மதிப்பீடு அழிகிறவரை தலித் அடையாளம் அழியாது. அந்த அடையாளத்தைத் தலித் தனக்குத்தானே வழங்கிக் கொள்ளவில்லை. மாற்றாரின் படைப்பான இந்தத் தழும்புக்கு (stigma) தலித் எந்த விதத்திலும் பொறுப்பாளியல்ல. இது நீண்ட நெடிய சமூக வரலாற்றில் வெடித்த பார்ப்பனீயப் புண்.

தலித்தாகப் பிறந்து இந்த இரணத்தை அனுபவித்த வனுக்கும், தலித்தாகப் பிறக்காததால் இந்த இரண அனுபவமே இல்லாதவனுக்கும் தலித் உணர்வு ஒரே மாதிரியாக இருக்க வாய்ப்பில்லை. தமிழனுக்கு ஏற்படும் தமிழ் உணர்வுக்கும், தமிழனல்லாதாருக்கு இருக்கக்கூடிய தமிழ் உணர்வுக்கும் அடிப்படை வேறுபாடு உண்டல்லவா?

தலித் அடையாளத்துக்குப் புதிய பரிமாணங்களைத் தருபவை தலித் கலைகள். தலித்தின் நாட்டுப்பாடல்கள், கூத்துகள், இசை முழவிகள் ஆகியவை தலித்தின் நெடிய கொடிய வாழ்வின் குமுறல்கள்; கொப்புளங்கள். இன்று இவையெல்லாம் தலித் உணர்வுக்குச் செழுமையூட்டு கின்றன.

www.tamilarangam.net



தலித் உணர்வு குறித்து முடிவாகக் கூறவேண்டியது இதுதான்.

தலித்துகள் தலித் உணர்வு கொள்ளட்டும்; தலித் அல்லாதான் தலித்துக்காக உணர்வு கொள்ளட்டும்; செயற்களத்தில் இரண்டும் சங்கமித்து சமூகப் புரட்சியில் வெல்லட்டும்.

## தமிழியமும் தலித்தியமும்

ஒரு வாதம் எழுப்பப்படுகிறது கீழ்க்காணும் வகையில்:

தலித்துகள், இந்திய அளவில்—அனைத்து மாநிலங்களிலும் வாழ்ந்துவரும் மக்கள். அவர்கள் பிரச்சினை என்பது அனைத்திந்தியப் பிரச்சினை. வேறுவிதமாகச் சொன்னால் தலித்தியம் இந்தியத் தேசியத் தன்மை கொண்டதாகும். எனவே அதன் தீர்வுகளும் அனைத்திந்தியத் தன்மை கொண்டவையாகவே இருக்க முடியும்.

இந்நிலையில் தமிழ்த் தேச எல்லைக்குள் தலித்துகளின் விடுதலையை முடக்கிவிட நினைப்பது அவர்கள் நலனுக்கு முரணானது அல்லவா?

இந்தக் கேள்வியை நாம் எதிர் கொள்ள வேண்டும்.

தலித்துகள் இந்தியா முழுமையும் இருப்பது போலவே, உழைக்கும் மக்களும் இந்தியா நெடுகிலும் இருக்கிறார்கள்.

இந்திய உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஒரு ஜன நாயகப் புரட்சியை வெடிக்கச் செய்து, அதில் இந்தியச் சமூக அமைப்பையும் அரசையும் நொறுங்கச் செய்து புதிய மக்கள் ஜனநாயக அரசைப் பிறப்பிக்க வேண்டும்—

—என்று மார்க்சிஸ்ட்டுகளும், ஒரு தேசிய ஜனநாயக அரசை உருவாக்க வேண்டும்—என்று கம்யூனிஸ்ட்டுகளும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறத்தொடங்கி எழுபத்தைந்து ஆண்டுகள் உருண்டு விட்டன. முக்கால் நூற்றாண்டு கடந்தபின்னும் இந்தியத் தொழிலாளி வர்க்கம் முழுமையாக ஒன்றுதிரட்டப்பட இயலவில்லை. அதாவது பாட்டாளி வர்க்கத்தின் 'இந்தியத் தன்மை' இன்றுவரை நிலைநாட்டப்பட வில்லை.

கம்யூனிஸ்ட்— மார்க்சிஸ்ட் கட்சிகளின் தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள், வெகுமக்கள் அமைப்புகள்— ஆகியவற்றின் பதாகையில் 'இந்திய' 'அனைத்திந்திய' என்ற பெயர்கள் இருந்தாலும், உழைக்கும் வர்க்கத்தின் 'இந்தியத் தேசியத் தன்மை' இன்றுவரை கானல் நீராகவே காட்சியளிக்கிறது.

அந்தக் கட்சிகளுக்குச் செல்வாக்குள்ள கேரளம், மேற்கு வங்கம் போன்ற ஒன்றிரண்டு மாநிலங்கள் மட்டுமே அவர்களுக்கு 'இந்தியத் தேசியம்'! அந்த மாநிலங்கள் கூட நதிப் பிரச்சினை, நிதிப்பிரச்சினை, மொழிப் பிரச்சினை, பண்பாட்டுப் பிரச்சினை, டெல்லியின் ஆதிக்கப் பிரச்சினை— என்று வரும்போது, அவை இந்தியத் தேசிய முகமூடியைக் கழற்றி வீசிவிட்டு, தம் சொந்தத் தேசியம்— மொழிவழித் தேசியம்— என்ற அசல் தேசிய முகத்தோடு வெளிப்படுவதை அடிக்கடிப் பார்க்கிறோம்.

'மாநிலங்களின் உரிமை' என்ற மாற்றுப் பெயரால், மொழி சார்ந்த தேசிய உணர்வை மூடப்பார்த்தாலும், அதையும் மீறி மொழித் தேசியம் முன்னுக்கு வந்து நிற்பதை மார்க்சிஸ்ட்டுகளால் மறைக்க முடிவதில்லை.

மேற்கு வங்கத்தின் மிகப்பெரிய 'பக்ரேஷ்வர்' மின் திட்டத்துக்கு மத்திய அரசு உதவ முன்வராத நிலையில், அதை எப்படியும் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்போம் என்று சூளுரைத்த முதல்வர் ஜோதிபாசு, அந்த மின் திட்டத்தை 'வங்கத்தின் பெருமை' (Pride of Bengal) என்று குறிப்பிட்டுத் தன் வங்க தேசியப் பெருமிதத்தை வெளிப்

www.tamilarangam.net



படுத்தினார். ஒரு கம்யூனிஸ்ட் முதல்வர் அதை 'உழைக்கும் வர்க்கத்தின் பெருமை' ((Pride of working class) என்று நாக்காமல், வங்கத்தின் தேசியப் பெருமையாகப் பார்த்தது சரியா? என்றால்,

'மெத்தச் சரி' என்பதே நமது பதில். வங்காள உழைக்கும் வர்க்கத்தின் தேசிய அடையாளம் 'வங்காளி' என்ற வங்க இனம் தான்.

இந்தியத் தேசியம் என்ற பொய்த் திரையைக் கிழித்துக் கொண்டு உண்மையின் வாள்முனை கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் வெளிப்படுவதுண்டு. இந்தப் போர்வாள் பொய்த்திரையால் போர்த்தப்பட்டிருக்கும் வரை, புரட்சி சித்திக்கப் போவதில்லை.

எனவேதான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல் 'இந்தியப் புரட்சிக்குத் தடையாயிருப்பது இந்திய ஒருமைப்பாடே; எனவே ஒருமைப்பாட்டை உடைப்பதே புரட்சியின் முதல் கட்டமாகிவிட்டது'— என்ற முடிவுக்கு வருகிறோம்.

அவரது சுயமான ஆய்வும் அனுபவமும், பெரியாருக்கு இந்த முடிவை முப்பதுகளில் அவருக்கு வழங்கின.

ஐம்பதுகளில் கம்யூனிஸ்ட்டுகள் 'தேசங்களின் தன்னுரிமை' என்ற முடிவை கொள்கை அறிக்கையில் வெளியிடத் தெலுங்கானாப் போர் அவர்களின் அனுபவப் பின்னணியாக இருந்தது; சோவியத் ஒன்றியம் ஆசானாக இருந்தது.

தெலுங்குத் தேசியத் தன்னுரிமையின் நுழைவாயிலாகத் தெலுங்கானா மாறக்கூடும் என்று அஞ்சிய நேருவும் அவரது காம்ரேடுகளும் (கம்யூனிஸ்ட் கட்சியில் பண்டிதரை பூஜித்த தலைவர்கள்) தெலுங்கானாவை வெற்றியின் சின்னமாகப் பார்க்காமல் ஒரு விபத்தின் அறிகுறி என அடையாளம் காட்டினார்கள்.

www.tamilarangam.net



விவசாயிகளின் தேசிய எழுச்சி, அல்லது— தெலுங்குத் தேசிய எழுச்சியின் விவசாய வடிவம், தெலுங்கானாவில் அரும்பிலேயே நசுக்கப்பட்டது.

1952க்குப் பின் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய இனக் கொள்கை கை வேறு கால்வேறாகக் கிழிக்கப்பட்டு அரபிக்கடலில் பாதியும் வங்கக்கடலில் மீதியுமாக மூழ் கடிக்கப்பட்டது.

இனி இந்தியாவில் புரட்சி ஏழு தலைமுறைகளுக்குத் தள்ளிப் போடப்பட்டுவிட்ட மகிழ்ச்சியில்,

— இந்தி எனும் ஜோதியிலும்,
— பார்ப்பனிய வேள்வியிலும்,

— டாட்டாவின் உலைக் களத்திலும் புடம் போடப் பட்ட 'இந்தியத் தேசியத்தின் நிறம்' மூவண்ணம், தீ வண்ணம், காவி வண்ணமென்று கொடிகள் மாறு படலாம். குறி ஒன்றுதான்.

இந்த எழுச்சி காஷ்மீர், பஞ்சாப், அசாம், நாகா லாந்து, ஆந்திரம், தமிழகம், கன்னடம், கேரளம், வங்கம் எனத் தொடரும். இன எழுச்சியின் சரித்திரம் தான் இனி எதிர்வரும் நூற்றாண்டின் இந்தியச் சரித்திரம்.

இன்று இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட இடது சாரி கட்சிகளின்—தேசியக் கோட்பாடு மார்க்சியக் கோட் பாடல்ல.

'இந்தியத் தேசியம்' தொழிலாளி வர்க்கத்தின் தேசிய மல்ல.

டெல்லி ஆதிக்கத்தைப் பாதுகாக்கும் இந்தியத் தேசியம் ஆளும் வர்க்கங்களின் தேசியம்.

தொழிலாளி வர்க்கத்தின் தேசியக் கோட்பாடு மொழிவழித் தேசத்தை அங்கீகரிக்கும்,

www.tamilarangam.net



அதன் தன்னுரிமைக்குப் போராடும்,

தன்னுரிமைக்குப் போராடும் பிற தேச மக்களை ஆதரிக்கும்.

மார்க்சியம் உலகெங்கும் ஒடுக்கப்பட்ட தேச இனங்களின் தொழிலாளிகளுக்குக் கற்றுத் தந்த பாடத்தை இந்தியக் கம்யூனிசம் ஏற்க மறுத்தது.

டெல்லியால் தளையிடப்பட்டுள்ள இந்நாட்டு உற்பத்தி சக்திகள் தளையறுத்து விடுவிக்கப்படும் போதுதான் தாய் மொழி, கல்வி, தொழில், வேளாண்மை, வேலைவாய்ப்பு, விஞ்ஞானம், கலைகள்— போன்ற அனைத்தும் பீறிட்டுப் பொங்கி வளர்ச்சியடைய வாயில்கள் திறக்கப்படும்.

எனவேதான் 'இந்தியத் தேசியம்' என்ற சிறை உழைக்கும் வர்க்கத்தின் முதல் பகை என்கிறோம்.

இந்துத்துவம் என்ற இந்துத் தேசியம்தான் இந்தியத் தேசியத்தின் உள்ளடக்கம் என்பதால் மட்டுமே அதை நாம் பகையாகக் கருதவில்லை. தமிழ்த் தொழிலாளி வர்க்கத்தின் பன்முக வளர்ச்சியைத் தேங்க வைத்து அணை போட்டுத் தடுத்து வைத்திருக்கும் மக்கள் விரோத— தொழிலாளி விரோத சக்தியாக இந்தியத் தேசியம் கால் கொண்டிருக்கிறது என்பதும்கூட அது முறியடிக்கப்பட வேண்டும் என்பதற்கு முக்கிய காரணமாகும்.

தமிழ்ப் பாட்டாளிக்கு இந்தியத் தேசியம் முதற் பகையாக உருக்கொண்டிருக்கையில் தமிழ்த் தலித்துக்கு மட்டும் எப்படி அது நேச சக்தியாக இருக்க முடியும்?

தலித்துகள் இந்தியா எங்கும் உள்ள குடிமக்கள் என்ற ஒரு காரணம் மட்டுமே அவர்களை இந்தியத் தேசியத்துக்கு ஆதரவாளர்களாக்கிவிட முடியாது.

தமிழ் மண்ணில்தான் தமிழ் தலித் வாழ்ந்தாக வேண்டும். தமிழ் மட்டுமே அறிந்த தமிழ் தலித்தின் கைகளையும் கால்களையும் தான் பிறரைக் காட்டிலும்

www.tamilarangam.net



இறுக்கமாகப் பிணைத்திருக்கிறது இந்தியத் தேசியச் சிக்கல்.

ஒரு தலித் தோழன்—

—தமிழனாக இருப்பதால் தேசிய ஒடுக்குமுறைக்கும்,

—பாட்டாளியாக இருப்பதால் மூலதனச் சுரண்டலுக்கும்,

—தலித்தாகவும் இருப்பதால் சமூக ஒடுக்கலுக்கும்,

ஆளாக வேண்டிய 'இந்தியக் கொடுமை'க்கு விடிவு என்ன?

''அனைத்திந்திய தலித் ஒற்றுமையால் இந்த ஆதிக்கச் சக்திகளை உடைக்க முடியாதா?'' என்று கேட்கப் படுகிறது.

அனைத்திந்திய தலித் ஒற்றுமை என்பது இந்தியத் தேசியத்துக்கு மாற்று ஆகாது— என்பது ஒரு அடிப்படை உண்மை.

விடுதலைக்கு முந்தியக் கட்டத்தில் தலித்துகளின் இடைக்காலக் கோரிக்கைகள் சிலவற்றின் வெற்றிக்காக— அரசை நிர்ப்பந்திக்க— அனைத்திந்திய தலித் ஒற்றுமை அவசியப்படலாம்.

ஒரு பொதுக் கோரிக்கைக்காக தலித்துகளை இந்திய அளவில் ஒன்றுபடுத்துவது என்பது வேறு. 'இந்தியன்' என்ற தேசியப் பெயரால் அவர்களை ஒன்றுபடுத்த நிர்ப்பந்திப்பது என்பது முற்றிலும் வேறு. ஒரு கோரிக்கைக் காகத் தேசிய எல்லைகளைக் கடந்து தலித்துகள் ஒன்று படலாம்; ஆனால் தேசிய எல்லைகளை உடைப்பதே ஒரு கோரிக்கையாக இருந்தால், அதைத் தமிழ் தலித் ஏற்க மாட்டான்.

எடுத்துக்காட்டாக, ராம்விலாஸ் பஸ்வானின் தலித் சேனா, இந்தியே பொதுமொழி என்பதைத் தலித்துகள் ஏற்கவேண்டும் எனத் தன் கோட்பாடாக வற்புறுத்துகிறது.

www.tamilarangam.net



காரணம் இந்தியை ஏற்காதவன் 'இந்தியனாக' முடியாது என்பது டெல்லியின் விதி.

ஆனால் தன் மொழியைத் துறந்துவிட்டு எந்த தலித்தும் இந்தியனாகப் பொய்முகம் பூணுவது எந்தக் காலத்திலும் நடக்காது.

பிற்பட்டோர் தளத்தில் இயங்கும் சாதி அமைப்புகளுக்கும் கூட இது பொருந்தும். தமிழ்நாட்டு யாதவர் மாநாட்டில் சரத்யாதவ் பேசியபோது, தமிழ் யாதவர்கள் எல்லாம் இந்தியே நம் தேசிய மொழி என்று ஏற்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்தியத் தேசியம் எந்த அமைப்புவழியாக இங்கே வந்தாலும், அது இந்தி தேசியமாக இறக்குமதியாவது தான் அதன் பிறவி நோய், அந்த நோய்க்கு ஒரே தீர்வு தமிழ்த் தேசியத் தன்னுரிமைதான்.

எனவேதான் தமிழியத்தைப் புறக்கணித்துவிட்டு, தலித்தியம் இயங்க இயலாது என்கிறோம். இரண்டும் உயிரும் ஊனும் போல.

ஃ ஃ ஃ

—இந்தி

—இந்துத்துவம்

—ஏகபோகம்

இவற்றின் கூட்டுப் பெயர்தான்— இந்தியத் தேசியம்!

—மொழி ஆதிக்கம்

—பார்ப்பனிய ஆதிக்கம்

—பெருமுதலாளித்துவ ஆதிக்கம்

என்பவைதாம் இந்தியத் தேசியத்தின் விளைவுகள்.

www.tamilarangam.net



இந்தியத் தேசியத்தின் வீழ்ச்சியில்தான் தலித்துகளின் விடுதலை முகிழ்க்க இயலும் என்பதை இந்திய வரலாறு எப்போதோ பதிவு செய்துவிட்டது.

அதன் வழிகாட்டுதலை ஏற்க மறுத்தால் நாம் வரலாற்றைப் பின்னோக்கிச் சுழற்றுகிறவர்களாவோம்.

## தமிழ்த்தேசிய முன்னணி

—பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் உருவாகும் வர்க்க முன்னணி.

—தலித்துகளின் தலைமையில் கட்டப்படும் சமூக முன்னணி.

—இவ்விரு முன்னணிகளைக் கொண்டு அமையும் தமிழ்த் தேசிய முன்னணி.

இதுதான் தமிழ்த் தேசத்தின் தன்னுரிமைப் போருக்கான அணிவகுப்பு.

வர்க்க முன்னணி என்பது உழைக்கும் வர்க்கங்களின் முன்னணியாக இருக்கும்போதே அதற்கு இரு பண்பு மாற்றங்கள் தேவைப்படும். முதலாவதாக, அது எதிரி வர்க்கக் கருத்துகளையும், சொந்த வர்க்கக் கருத்துகளையும் களைந்து, சாரத்தில் தன்னைப் பாட்டாளி வர்க்கக் கருத்துக்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்வது— சுருங்கச் சொன்னால் De-class ஆவது— என்ற பண்பு மாற்றம் தேவைப்படும்.

இரண்டாவதாக சுய சாதி உணர்வைக் களைவது— —தலித் உணர்வை உட்கொள்வது— Decaste— Debrahminise— ஆவது, என்ற பண்பு மாற்றம் பெறுவது.

இந்த இரு பண்பு மாற்றங்களும் பிரச்சாரங்களாலோ, பிரசுரங்களாலோ நிகழக்கூடியவை அல்ல.

இடைக்காலத் திட்டங்கள்,

www.tamilarangam.net



தொலைநோக்குத் திட்டங்கள் ,

அவற்றை எய்தும் போராட்டங்கள்,

போராட்டங்களினூடேயே சுயபோராட்டங்கள்

என்ற நீண்ட நெடிய இயக்கப் போக்குகளின் விளைவாகத் தான் பண்பு மாற்றங்கள் நிகழக்கூடும்.

சாதி ஒழிப்பு என்பது ஒரு சமூகப் புரட்சி என்றால், அந்த இலக்கை நோக்கிய ஒவ்வொரு நாளிலும் ஒரு கலாச்சாரப் புரட்சி தமிழனுக்கு உள்ளும், வெளியிலும் நடந்துகொண்டே இருக்க வேண்டும். அதற்கான புறச் சூழல்களை மூன்று முன்னணிகளும் உருவாக்கித் தந்தபடியே இருக்க வேண்டும்— இயங்க வேண்டும். வர்க்க முன்னணி யில் நிகழும் பண்பு மாற்றங்கள், சமூக முன்னணியிலும் நிகழ்ந்தாக வேண்டும்.

ஒரு முன்னணியில் எய்தப் பெறும் குணமாற்றம் மற்ற இரு முன்னணிகளையும் பாதிக்கும்.

சமூக முன்னணியின் புரட்சிகரப் பண்புகள் வர்க்க முன்னணியிலும், வர்க்க முன்னணியின் முற்போக்குக் கூறுகள் சமூக முன்னணியிலும் பதிந்து அவை புதிய வடிவம் பெறும்போதுதான் தமிழ்த் தேசிய முன்னணி தேசத்தின் அனைத்துத் தளங்களிலும் ஒரு புரட்சிப் பேரணியாகப் பரிணமிப்பதைக் காண முடியும்.

அன்று—

சுரண்டப்படும் பாட்டாளிகள், தங்களைத்' தமிழ் பாட்டாளிகளாகவும்,

ஒடுக்கப்படும் சமூகங்கள், தம்மைத் தலித் சமூகங் களாகவும்,

ஒடுக்கப்படும் தமிழர்கள், தம்மைத் தலித் தமிழர் களாகவும், அடையாளபூர்வமாக அல்ல, உணர்வு பூர்வ

www.tamilarangam.net



மாகவே உருமாற்றிக் கொள்ளும் ஒரு புதிய பரிமாணம் கிடைக்கும்.

அன்றுதான்— புரட்சி, தலித் தன்மையும், பாட்டாளித் தன்மையும், தமிழ்த்தன்மையும் பெற்று முப்பரிமாணப் புரட்சியாக முகிழ்க்கும்.

## தலித் அமைப்பு சாதிச் சங்கமா?

தலித் சமூகம் இந்துத்துவப் பொருளில் ஒரு சாதி அல்ல. அது அனைத்துச் சாதிகளாலும் ஒடுக்குமுறைக் காளான தாழ்த்தப்பட்ட சமூகம். தலித் மக்கள் தம் பெயருக்குப் பின்னால் சாதிப்பட்டம் போடுவது கிடையாது. ஏனெனில் அவர்களுக்குச் சாதி இல்லை. அவர்கள் எந்தச் சாதியிலும் சேர்க்கப்படாதவர்கள்; சேராதவர்கள். ஆகையால்தான் அவர்களைச் சாதியிலிகள், அவர்ணாக்கள் என்கிறோம்.

எனவே தலித் அமைப்புகளைச் சாதிச் சங்கங்களோடு இணையாக வைத்துக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

பழமைவாதக் கம்யூனிஸ்ட்டுகள் பேசுகையில் ‘தொழிலாளிக்குச் சாதி இல்லை; மதம் இல்லை; மொழிஇல்லை; இனம் இல்லை’ என்று உரத்த குரலில் பிரகடனம் செய்வதுண்டு.

சாதியும் மதமும் நிரந்தரமல்ல; மறையக் கூடியவை. ஆனால் மொழியும் மொழிசார்ந்த இனமும் அத்தகையவை அன்று. அவை மனிதனோடு பிறந்து அவன் அழியும் போது மட்டுமே அழியக்கூடிய சமூக முன்னேற்றச் சக்திகள் (Social engineering forces) என்பதைப் பார்க்க மறுக்கிறவர்களைப் போலவே, சாதிகளையும் தலித்துகளையும் பிரித்துப் பார்க்க மறுப்பவர்களின் பார்வை இருக்கிறது.

www.tamilarangam.net



சாதி ஒழிப்பின் மறுபெயர் அனைத்துச் சாதியினரும் தலித்துகளாவது என்பதுதான். வர்க்க மற்ற நிலை என்பது அனைத்து வர்க்கங்களும் பாட்டாளி வர்க்கமாவது என்பது போன்றதுதான் இதுவும். தலித்தில் தொடங்கித் தலித் மயமாவதில் முடிகிற சமூகப் புரட்சியில் சாதியச் சங்கங் களுக்கு இடமில்லை. சாதிகளின் சமத்துவத்துக்கு ஊடா கச் சாதி ஒழிப்பை நோக்கி நகர்கிற சமூக இயக்கத்தின் சாரத்தை உள்வாங்கிக் கொண்டு அதற்கான வேலைத் திட்டங்களோடு இயங்கக்கூடிய சமூக அமைப்புகள் சாதி களின் பெயரைத் தாங்கி இருந்தாலும், தலித்தியத்தை ஏற்றுத் தலித் முன்னணியில் பங்கேற்க முன்வருமானால் அத்தகைய அமைப்புகளைச் சாதி அமைப்புகள் என்று ஒதுக்கிவிடாமல் தலித் முன்னணியில் இணைத்து அதன் இயக்க சுழற்சியில் சாதியத்தை பார்ப்பனீயத்தை- அவை துறக்கச் செய்வது இயலக் கூடியதே.

வடக்கே கன்ஷிராமின் அமைப்பு இந்தத் திசையில் தான் துவக்கம் கண்டது. இன்றைய அதன் திசைக்குழப்பங் கள் வலுவான தத்துவ அடித்தளமின்மையால் நிகழ்வ தாகும்.

இங்கேயும் அத்தகைய முயற்சியில் தலித் அமைப்புகள் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இதர சாதி அமைப்புகளைப் போல் அவை செயல்படுவதைத் தவிர்த் தாக வேண்டும். பிற்பட்டோர், சிறுபான்மையர் ஆகிய சமூகங்களைத் தன்பால் ஈர்க்கும் மைய சக்தியாக எஃகனைய தலித் ஒற்றுமை கட்டப்படவேண்டும்.

## தலித் இலக்கியம்

தலித் விடுதலையை முன் நிறுத்தும் சித்தாந்தங்கள் தலித் இலக்கியத்தின் முன்னோடியாய் இருக்க வேண்டும். தலித் பார்வையில் அரசியல், பொருளியல், பண்பாட்டுச் சிக்கல்களை விளக்கும் கட்டுரைகளும் நூல்களும் ஏராளமாக எழுதப்பட வேண்டும். தலித் இயக்கத்திற்குத் தத்துவார்த்த அடிப்படைகளை வழங்கும் சிந்தனைகள் நூற்றுக்கணக்கில் பூக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தத் தேவையே இன்றைய தேவை. இதை நிறைவு செய்ய வேண்டிய முதல் பொறுப்பு தலித் அறிவுஜீவி களுக்கே உண்டு. எனினும் சமூகப் புரட்சியில் தலித்துகளின் பங்கைப் பிழையின்றி புரிந்துகொண்ட தலித் அல்லாத அறிவுஜீவிகளும் இந்தப் பொறுப்பில் பங்கேற்கலாம். பார்ப்பனீயக் களைவையும், சாதிக் களைவையும் ஏற்றுக் கொள்ளும் எவரும் தலித் விடுதலைக் கோட்பாடுகளுக்குச் செழுமையூட்ட முடியும்.

தலித் படைப்பிலக்கியங்களுக்கு முன் ஏர்பிடித்துச் சால் உழுதுதரும் பணியைத் தலித்துகளுக்காகக் கருத்துப் போர் நடத்தும் இலக்கியங்கள் நிறைவேற்ற வேண்டும்.

ஃ ஃ ஃ

புறவியல் சிக்கல்களால் பின்னப்பட்ட உளவியல் சிக்கல்களின் ஏதாவது ஓர் இழையை அறுபடாமல் நளினமாக விடுவித்து அழகுற வெளிப்படுத்தும் கலை நேர்த்தியில்தான் படைப்பாளியின் நேர்மையும், படைப்பின் கூர்மையும் அடங்கியிருக்கின்றன.

தலித் சமூகத்தின் புறச்சிக்கலும் அகச்சிக்கலும் தலித் ஒருவரின் சுய அனுபவப் படிவங்களில் பதிவானவாறு வெளிப்படுத்தும் தகுதி தலித் படைப்பாளிக்கே உண்டு. செய்நேர்த்தியில் மெருகேறுவது படைப்பாளியின் முயற்சி, உழைப்பு ஆகியவற்றைப் பொறுத்ததாகும்.

தலித் பற்றிய படைப்பை, தலித் அல்லாதார் படைக்கக் கூடாதா? என்றால், கூடாது என்பதல்ல, முடியாது என்பதே யதார்த்தம்.

பிறகு தலித் அல்லாத படைப்பாளிகள் தலித் இலக் கியத்துக்குப் பங்களிப்பது எப்படி?

தலித் அல்லாதவர்களால் தலித்தைப் 'பற்றிய' படைப்பைத் தர முடியாதெனினும், தலித்தைச் 'சுற்றிய' படைப்பை அவர்களால் வழங்க முடியும்.

www.tamilarangam.net



தலித்தாக வாழ்ந்த அனுபவப் பதிவாக தலித் பற்றிய இலக்கியம் இருக்கும்.

ஊரிலிருந்து சேரியைப் பார்த்த அனுபவம், அருகிலிருந்து தலித்தை உணர்ந்த அனுபவம் போன்றவையே தலித்தைச் சுற்றிய படைப்புக்கு ஆதாரமாக இருக்கும்.

உதாரணங்கள் நிறைய தரலாம். தலித்தைப் பற்றிய படைப்பு குறித்த ஒரு பார்வை இது.

வீட்டின் நிலைக் கதவைக் கழற்றிப் பலகையாகத் தெருவில் கவிழ்த்துப்போட்டு, அதன்மீது வைத்து வெட்டிப் பன்றிக் கறியைக் கூறுபோட்டு எல்லாக் குடும்பங்களுக்கும் விநியோகித்து மகிழும் தலித் சமூக உறவுக்காட்சி ஆதிப் பொதுமைப் பண்பாட்டின் மரபுத் தொடர்ச்சியாகத் தமிழ்ச் சேரியில் நிலவும் ஒரு சமூக நிகழ்வைப் 'பழையன கழிதலும்' நாவலில் நுணுக்கமாகப் பதிந்திருக்கும் சிவகாமியின் தலித் அனுபவத்தின் ஒரு எள்முனை அளவேனும் இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனலில்' எங்கு தேடினாலும் கிடைக்காது- அது வெண்மணி தலித் மாந்தர் பற்றிய கதை என்று எத்தனை பேர் கோபுரமேறிக் கூக்குரலிட்டாலும்; சாகித்ய அகாடமியே அதற்குச் சான்று வழங்கினாலும்.

'சேரிக் குடிசைகளும் மக்களும் எரிந்த சோகம் டெல்லியில் என்னைப் பாதித்தது எந்த விதம்' என்று இ. பா. எழுதியிருந்தால் அந்தப் படைப்பில் ஒருக்கால் இலக்கிய நேர்மை வெளிப்பட்டிருக்கும்.

தலித்தைச் சுற்றிய படைப்புக்கு உதாரணமாக என் நினைவுக்கு உடனே வருகிற நாவல் 'வேரில் பழுத்த பலா'. சமுத்திரம் எழுதியது. தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலகத்தில் பணி செய்யும் ஒரு தலித் பெண் பார்ப்பனீய அகந்தை கொண்ட மேல்சாதிச் சக அலுவலர்களால் பணி நிலையிலும் மன நிலையிலும் சந்திக்கும் துன்பங்களும், அவற்றை அருகிலிருந்து கண்டுவரும் மனித நேயமிக்க

www.tamilarangam.net



தலித் அல்லாத ஒரு இளைஞன் அந்தப் பெண்ணின் உணர்வுகளை மதித்து அவளுக்குப் பரிவு காட்டி உதவுவதும் யதார்த்தமாக உருக்கொண்டுள்ளன. தலித்தைச் 'சுற்றிய' நாவல் என்று இதைத் தாராளமாகப் பரிந்துரைக்கலாம்.

மேற்சொன்ன இரு பிரிவுகளையும் அடையாளப் படுத்த, ஒன்றைத் தலித் இலக்கியம் என்றும், மற்றொன் றைத் தலித் நேய இலக்கியம் என்றும் பாகுபடுத்தலாம்.

இருபிரிவும் தலித்துகளுக்கு உணர்வூட்டவும், நம்பிக்கை யூட்டவும் வல்ல கலை இலக்கியப் படையல்களைத் தர வேண்டும்.

'எங்களுக்கு அழகியல் தேவை இல்லை; அழகியலற்று வறண்டிருந்தாலும் தலித்படைப்புகளை வரவேற்கவே செய்வோம்' என்று சிலர் உணர்ச்சி மேலீட்டால் வாதிடு வது விதண்டாவாதம். தலித் வாழ்வு நுண்மையாகவும் செம்மையாகவும் வடிக்கப்பட்டால் அந்த அனுபவங் களுக்கே உரிய உள்ளார்ந்த தலித் அழகியல் வேறெங்கும் காணக் கிடைக்காததாக அமையும். பூமணியின் எழுத்து களில் இந்த அம்சம் நுட்பமாகச் செயல்படுகிறது. லா. ச.ராமாமிர்தத்தின் பார்ப்பனீய அழகியலில் சொக்கிக் கிடந்தவர்களை பாமாவின் அழகியல் விழிப்பூட்டியிருக் கிறது என்பதற்கு 'இந்தியா டுடே' இலக்கிய மலரே சான்று.

தலித் இலக்கியம் செழுமையுறுதல், தலித் இலக்கியம் வலிமையுறுவதற்குப் பெரிதும் உதவும். தலித் படைப் பாளிகளும், தலித் நேயப் படைப்பாளிகளும் அந்த இலக்கை நோக்கி இணைந்து முனைந்து உழைக்கவேண்டும்.

□ □

www.tamilarangam.net

# பார்ப்பனியமே பாரதத் தேசியம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள் சமூகம் நான்கு நிலவொழுக்கங்களுடன் (மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை) வாழ்ந்ததாக நமக்கு அகச் சான்றுகள் ஏராளமாக உள்ளன (பாலை என்ற திணையை யும் சேர்த்து ஐந்து திணையொழுக்கங்களை இலக்கியங்கள் குறிப்பிடுவதுண்டு). மேற்சொன்ன நான்கு நிலங்களைத் தான் நானிலம் என்று தமிழர்கள் (தமிழகத்தைக்) குறிப் பிட்டார்கள். தமிழகத்துக்கு அப்பாற்பட்டு இங்கு வந்து சேர்ந்த மக்களை அவர்களின் திசைகளின் பெயரால் அழைத்தார்கள். வடக்கிலிருந்து வந்தவர்களை வடுகர் அல்லது வடவர் என்றார்கள். அவர்கள் மொழியை வடமொழி என்றார்கள்.

கடல் கடந்து வந்த யவனர், சீனர் போன்றோர் இங்கு நிலைத்த குடிகளாக வாழவில்லையாதலால், அவர்களால், தமிழ்ச் சமூக அரசியல் வாழ்வில் பிற்காலத்தில் பாதிப்புகள் ஏற்படவில்லை.

நகைப்புத் தோன்றுவதற்குரிய நான்கு காரணங்களைக் கூற வந்த தொல்காப்பிய உரையாசிரியர் தமது உரை யில் நான்கில் ஒன்றாகப் பார்ப்பனர் பேசும் தமிழைக் கூறு கிறார். (தொல்காப்பியம் -மெய்ப்பாட்டியல்- நூற்பா 248) பார்ப்பனர் பேசும் தமிழ், தமிழ் மக்களுக்குச் சிரிப்பூட்டும் வகையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார். (இன்றும் கூட தொலைக்காட்சியிலும் வானொலியிலும் சிரிப்பு நாடகங்களுக்கு பார்ப்பனத்தமிழே பயன்படுத்தப்படுவது இதன் தொடர்ச்சிதானோ?)

www.tamilarangam.net



எனவே தமிழுக்கும், தமிழர்களுக்கும் பார்ப்பனர் அந்நியர்களாகவே இங்கு வந்து சேர்ந்தனர் என்பதை வரலாற்றுப் புரட்டு என்று கூற முடியாது. ஆதிசங்கரர், சீர்காழி ஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று குறிப்பிட்டது 'தமிழ்க் குழந்தை' என்ற பொருளில் தான். தமிழர்களைத் திராவிடர் என்றும் அழைக்கும் மரபு ஏழாம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டது.

வேதங்கள், வேத பாடசாலைகள். சமஸ்கிருதம் என்று தமக்கு வேலியிட்டுக் கொண்ட பார்ப்பனர்களுக்கு மாற்றாகத் திருமுறைகள், ஆழ்வார் பாசுரங்கள் இவற்றைக் கோயில்களில் பாடியும், கற்பித்தும், வளர்த்தும் வந்தவர்களைத் 'திராவிட பிராமணர்கள்' என்று குறிப்பிடும் வழக்கும் அன்று தோன்றியது. எனவே சமஸ்கிருதம் ஆரியம் எனப்பட்டது. வடமொழி வழிவந்தவர்களும், வட இந்தியக் கோத்திரங்களின் வழி வந்தவர்களும் ஆரியர்கள் அல்லது ஆரியப் பார்ப்பனர்கள் எனப்பட்டனர்.

பொதுவாகப் 'பார்ப்பனர்' என்ற சொல் திராவிட பார்ப்பனர்களைக் குறிப்பதில்லை. ஆரியப் பார்ப்பனர்களைக் குறிப்பதாகவே வழக்காற்றில் வந்துவிட்டது; வரலாற்றிலும் பதிந்து விட்டது.

தமிழர்களின் பண்பாட்டோடும், வரலாற்றோடும் இரண்டறக் கலந்து நின்றதால் திராவிடப் பார்ப்பனர்களாகிய தேசிகர்கள், தீட்சிதர்கள், குருக்கள், ஓதுவார்கள் ஆகியோரைத் தமிழ்த் தேசிய இனமாக அடையாளம் காண்பதில் தவறேதும் இல்லை.

ஆனால் வேதம், வேதநெறி, வடமொழி, வடமொழிப் பண்பாடு, வடவர் கோத்திரங்கள் ஆகியவற்றையே வாழ்க்கை நெறியாகக் கொண்ட ஆரியப் பார்ப்பனர்கள் தமிழ்த் தேசியத் தன்மைக்கு அன்று முதல் அந்நியப்பட்டே இருக்கின்றனர்.

பொதுவாகப் 'பார்ப்பனீயம்' என்ற சொல் வைதீகம், வடமொழிக்கலாச்சாரம்,வர்ணாசிரமம் இவற்றின் பேரால்

www.tamilarangam.net



சாதீய மேலாதிக்கத்தை இறுக்கி உறுதிப்படுத்தும் சனாதன தர்மத்துக்குரிய சொல்லாகிறது. வைதீக தர்மம், வர்ணா சிரம தர்மம், பார்ப்பனிய தர்மம் என்பவை ஒரே பொருள் கொண்ட பல சொற்கள். இவற்றின் பொதுப் பெயர் தான் இந்து மதம் என்பது. இதைத்தான் ஆரியம் என்று அடையாளப்படுத்தினார்கள் தமிழறிஞர்கள்.

கபிலர் போன்ற சங்க காலப் புலவர்கள் ஆரியப் பார்ப் பனர்களாகவே இருந்திருக்கக் கூடும். இன்றும் கூடப் பார்ப்பனர் பலர் தமிழ்ப் புலவர்களாக உள்ளனர். எனினும் வாழ்க்கை நெறியாக அவர்கள் வைதீக வர்ணாசிரம நெறி யைத்தான் கடைபிடிக்கின்றனர். திருமுறைகளைவிட சாஸ்திரங்களே அவர்களுக்கு மேன்மையானவை. தமிழை விட சமஸ்கிருதமே அவர்களுக்கு உயர்வானது. வள்ளுவர் அல்ல வியாசரே அவர்களுக்கு ஆன்மிக வழிகாட்டி.

சமஸ்கிருதத்தில் நாத்திகக் கருத்துகளும் எழுதப் பட்டன. ஆனாலும் பார்ப்பனீயம் மட்டுமே சமஸ்கிருதத் தைத் தன் கலாச்சார ஆயுதமாகக் கைப்பற்றிக் கொண்டது. எனவே பார்ப்பனீய எதிர்ப்பியக்கம், மக்களின் மொழிகளையே தன் வாளாகவும் கேடயமாக வும் தரித்துக் கொண்டது. 'தேவ பாஷையை' நிராகரித்த தேசிய மொழிகளின் வளர்ச்சியைப் பார்ப்பனீயம் சகித்துக் கொண்டாலும் சாஸ்திரங்களின் பாஷையாக சம்ஸ்கிருதம் இருந்ததால் சமஸ்கிருதம் பார்ப்பனீயத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகிவிட்டது.

1916இல் அன்னிபெசண்ட்டின் தன்னாட்சி இயக்கம் செல்வாக்கான மயிலாப்பூர் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. எனவே 'திராவிட சங்கத்தினர்' (1912 இல் தொடங்கப்பட்டது) அந்த இயக்கம் 'ஆரிய இயக்கம்' என்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆரியர்கள் என்ற சொல் அன்னி பெசண்ட் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட திடீர்ச் சொல்லல்ல; அதேபோல் 'திராவிடர்கள்' என்ற சொல்லும் கால்டுவெல் பாதிரியாரின் கண்டுபிடிப்பல்ல. அவை இரண்டுமே இரு மரபினங்களை (Races) குறித்த வரலாற்றுப் பெயர்கள்.

தமிழக வரலாற்றில் பார்ப்பனர்களை ஆரியர்கள் என்றும் பார்ப்பனரல்லாதாரைத் திராவிடர் என்றும் அடையாளப்படுத்த நேர்ந்தமைக்குக் காரணம் 'வெள்ளையனின் சதியே' என்று சில பார்ப்பனச் சிந்தனையாளர்கள் அன்றே பேசினார்கள்.

மகாபாரதம் வன பருவம், 48 ஆம் அத்தியாயத்தில் பாண்டவர்கள் இந்திரப் பிரஸ்தத்தில் நடத்திய ராஜசூய வேள்வியில் கலந்து கொண்ட நாட்டினரின் பட்டியல் தரப்படுகிறது. அதில் வங்கர், அங்கர் போன்ற பல்வேறு இனத்தவருடன் 'திராவிடர்' கலந்து கொண்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. தமிழர்களே அன்று திராவிடர் எனப்பட்டனர்.

மனு தர்மம் அத்தியாயம் பத்து சூத்திரம் நாற்பத்து நான்கில் ''பவுண்ட்ரம் அவுண்ட்ரம், திராவிடம், காம்போஜம், யவனம், பாரதம்'' என்று குறிப்பிடப்படும் தேசங்களில் 'திராவிடம்' என்பது தமிழ்த் தேசத்தைக் குறிக்கும் சொல்லேயாகும்.

பார்ப்பனர்களை ஆரியர்கள் என்றும், பார்ப்பனரல்லாதாரை திராவிடர்கள் என்றும், தமிழகத்தைத் 'திராவிடம்' என்றும், வட இந்தியாவை 'ஆரியவர்த்தம்' என்றும் குறிப்பிட்டமைக்குக் காரணம் அவை இந்தியாவின் சரித்திரம், இதிகாசங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியே தவிர திடீர்த் தோற்றங்கள் அல்ல என்பது தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கி.மு.-வில் வாழ்ந்த சிந்துவெளித் திராவிடர்களும், அவர்கள் நகரங்களையும், நாகரீகத்தையும் அழித்த ஆரியர்களும் அந்தந்த மரபினத்தைச் (Race) சேர்ந்தவர்கள். நவீன காலத் தேசிய இனம் (Nationality) என்ற வரைவிலக்கணப்படி தமிழ் மொழியைப் பேசும் தமிழ்த் தேசத்துத் தமிழர்கள் தாம் தமிழ்த் தேசிய இனம் ஆவார்கள். அதே போல் தென்னிந்திய மக்கள் மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்கள் என்ற தனித்தனித் தேசிய இனங்கள் ஆவார்கள். இவர்கள் எல்லாம் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாதலால் தென்னிந்தியர்கள் அனைவரும் 'திராவிடர்கள்' என்ற தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாக ஒரு கருத்தை திராவிடர் இயக்கம் முன் வைத்தது.

இந்தியத் தேசியம் போன்றே, திராவிடத் தேசியமும் தமிழ்த் தேசியத்துக்கு மாற்றாக இருக்க இயலாது. இயலவில்லை என்பதை வாழ்க்கையும், வரலாறும் நிருபித்து விட்டன.

எனவே 'திராவிடர்கள்' என்பவர்கள் பார்ப்பனரல்லாதார் என்று பெரியாரும், தென்னிந்திய மொழிக் குடும்பத்தினர் என்று அண்ணாவும் விளக்கமளித்திருந்தாலும், சாரத்தில் அச்சொல் தமிழர்களையே குறித்தது. சரித்திரத்திலும், இதிகாசத்திலும் அது தமிழர்களையே குறத்தது. இன்று திராவிட இயக்கம் என்ற சொற்றொடர் பண்பாட்டுத் துறையில் தமிழினத்தின் முற்போக்குச் சிந்தனையின் குறியீட்டுத் தொடராகப் பரிணாமம் பெற்றுள்ளது.

தமிழ்த் தேசிய இன உருவாக்கம் (Formation of Tamil Nationality) முழுமை பெறத் தடையாக வர்ணாசிரமமும், பார்ப்பனீயமும் ஒருபெருஞ் சுவராக இருப்பதால் பெரியார் பார்ப்பனர்களைத் தமிழர்களாக அங்கீகரிக்கவில்லை. தங்கள் மூலநூல் வேதங்கள் என்றும், மூலமொழி

www.tamilarangam.net



சமஸ்கிருதம் என்றும், மூலவர்கள் ரிஷி கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் நம்புகிற வரை பார்ப்பனர்கள் தமிழ்த் தேசிய நீரோட்டத்திலிருந்து அந்நியப்பட்டே இருப்பார்கள். இந்த அந்நியத் தன்மையை வென்று தமிழ்த் தேசிய இனத்தோடு தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ராமானுஜர் இயக்கம் நடத்தினார்; கோபால கிருஷ்ண பாரதியும், சுப்ரமணிய பாரதியும், சூரிய நாராயண சாஸ்திரியும் (பரிதிமாற் கலைஞர்) இலக்கியம் படைத்தார்கள்.

பார்ப்பனீயத்தை வென்று தமிழர்களாக வாழ்ந்த - வாழ்கிற பார்ப்பனர்கள் உண்டு. என்றாலும் இந்த முயற்சிக்கு ஆதரவு தருகிற பார்ப்பனர்களை விட எதிர்த்து நிற்கும் பார்ப்பனர்களே பெரும்பான்மை யினராக இருப்பதால், தமிழ்த் தேசியத்துக்கெதி ரான இந்திய தேசியத்தின் பக்கமே (அதாவது 'இந்துத்' தேசியத்தின் பக்கமே) பார்ப்பனர்களுடைய பேராதரவும் பார்ப்பனீயர்களின் பெருமளவு ஆதரவும் இருந்தன; பார்ப்பனீயத்தால் பாதிக்கப்பட்டுத் தமக்குக் கீழ்ப்படி யிலுள்ள சாதி மக்கள் மீது மேலாதிக்கம் செலுத்த எண்ணுபவரைப் 'பார்ப்பனீயர்கள்' என்கிறோம். வைதீகத் தர்மம் அல்லது பிராமணத் தர்மம் அல்லது வர்ணாசிரமத் தர்மம் என்பதே பின்னாளில் இந்துத் தர்மம் என்றும் இந்து மதம் என்றும் வழங்கியது. இந்து மதத்தின் வர்ணாசிரம கலாச்சாரம்தான் இந்தியாவின் கலாச்சாரம் என்று நம்பவைப்பது ஆதிக்க வர்ணத்தின் தத்துவமான பார்ப்பனீயத்திற்கு மிக எளிதாகவே இருந்தது. எனவே இந்துத் தர்மம்தான் அல்லது பார்ப்பனீயம்தான் 'இந்தியத் தேசியம்' என்ற சொல்லாக் கத்தின் தத்துவ உள்ளடக்கம்.

பண்டைய காலத்திலேயே தமிழில் எழுதப்பட்ட பவுத்த இலக்கியங்களும் சமண இலக்கியங்களும் தமிழுக்குச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்த சேவை பார்ப்பனீய எதிர்ப்பு என்பதுதான். தமிழர்களின் தொன்மைச் சமயங்களான சைவமும், வைணவமும் பின்னாளில் இந்து மதத்தில் தன்வயமாக்கப்பட்டன. ஆனால் அவை தோன்றியபோது பார்ப்பனீய தர்மத்தின் பிரிவுகளாகத் தோன்றவில்லை என்பதே உண்மை. வர்ண சாதி ஒடுக்குமுறைக்குச் சைவத்தையும், வைணவத்தையும் பயன்படுத்திக் கொள்வதில் பார்ப்பனியம் வெற்றி பெற்றது. பவுத்தமும், சமணமும் தோற்றன.

எனினும் வள்ளுவர் காலத்திலிருந்து வள்ளலார் காலம் வரை, சிலப்பதிகாரத்திலிருந்து சித்தர் பாடல் வரை பார்ப்பனிய எதிர்ப்பு என்பது பல்வேறு படிநிலைகளில் தமிழகத்தில் நிலவி வந்தது. பார்ப்பனிய எதிர்ப்பியக்கத்தின் தொடர்ச்சியாகத்தான் பெரியார், சிங்காரவேலர், ஜீவா, மறைமலை அடிகள், திரு.வி.க., அண்ணா ஆகியோரின் இயக்கங்களைப் பார்க்க வேண்டும். இந்திய அளவில் அண்ணல் அம்பேத்கரின் தலித் இயக்கம் பார்ப்பன எதிர்ப்பையே ஆணிவேராகக் கொண்டிருந்தது.

பாரத கலாச்சாரம் என்ற இந்து தர்மம்தான் இந்திய ஒருமைப்பாட்டுக்கான தத்துவச் சங்கிலியாக இருந்தமையால், அந்த ஒருமைப்பாடு சிதறாமல் பாதுகாபதற்குப் பார்ப்பனியத்தின் மதமான இந்து மதமும், வடமொழியின் வாரிசான இந்தியும் 'பரத கண்டம்', 'பரத் ராஷ்ட்ரா' எனப் பேசும் அரசியல்வாதிகளின் அடிப்படைத் தேவையாயின. இந்திய ஆளும் வர்க்கங்களின் அரசியல், பொருளியல் நோக்கங்களுக்கு 'இந்தியத் தேசியம்' என்ற பார்ப்பனியக் கோட்பாடு மிகவும் உகந்ததாகவும், மிகப் பொருத்தமானதாகவும் அமைந்தது.

'இந்தியக் கலாச்சாரம்' என்ற மாயச் சொல்லில் புதைந்திருக்கும் இந்தியத் தத்துவம் (Indian Philosophy) எனப்படும் பார்ப்பனிய தர்மத்தைத்தான், இந்திய

www.tamilarangam.net



ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் அனைத்திந்திய கட்சிகள் அனைத்தும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ தம் தத்துவ அடித்தளமாகக் கொண்டுள்ளன.

விவேகானந்தரும், டாக்டர் ராதாகிருஷ்ணனும், ஜே. கிருஷ்ணமூர்த்தியும் இந்தியத்தத்துவம் என்று இந்துத் துவத்தின் அழுக்குகளை நீக்கி அதை மிக உன்னதமாகக் காட்ட முயன்றாலும் அதன் அஸ்திவாரம் என்பது வைதீகச்சனாதனம் தான் என்பதைப் பண்டித நேரு ஏற்படுத்திய 'பாரத இதிகாச சமிதி'யின் சமஸ்கிருத அறிஞர்கள் உருவாக்கிய 'இந்திய மக்களின் பண்பாடும் வரலாறும்' என்னும் நூல் தொகுப்பில் தத்துவ ஆய்வாளர் கள் ஒப்புக் கொள்கிறார்கள். பார்ப்பனியம் (இந்து மதம்) ஒரு மதச் சித்தாந்தமாக வளர்ந்தபோது சைவம், வைணவம், ஆகிய தனக்கு மாறுபட்ட தமிழ்ச் சமயங்க ளைத் தன்னுள் தன்வயப்படுத்திக் கொண்டது. விஷ்ணு வின் அவதாரம் தான் புத்தர் எனக் கதைத்தது. பவுத்தத் தையும் அதே போன்று சமணத்தையும் தன் அங்கங்களாக் கிக் கொண்டது. அதன் மூலம் 'இந்துத்துவம்' என்ற பார்ப்பனியத்திற்கு இந்தியத் துணைக் கண்டத்தில் எதிரி கள் இல்லாமல் பார்த்துக் கொண்டது.

தத்துவத் துறையில் (Philosophy) பார்ப்பனியத்துக்கு எதிராகக் கிளம்பியவை நியாயம், வைசேசியம், மீமாம்சம் போன்ற பொருள் முதல் வாதத் தத்துவங்கள். மிகச் சாதுர்யமாக இவற்றுக்கு உரைகள் (பாஷ்யம்) எழுதியவர் களால் இவற்றின் வீரியம் நசுக்கப்பட்டு ஏழாம்நூற்றாண்டு வாக்கில் இவை அனைத்தும் வேதாந்த சித்தாந்தத்தின் விழுதுகளாக்கப்பட்டு விட்டன. 'வேதத்தின் முடிவு' என்பதுதான் வேதாந்தம். வேதாந்தத்தின் விளக்கங்கள் தான் உபநிஷத்துகள்.

ஆதிசங்கரர் இந்துத் தத்துவத்தின் இமாலயமாக எழுச்சியுற்ற போது, பார்ப்பனியத்துக்கெதிரான பொருள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதல்வாதத் தத்துவங்கள் பழிவாங்கப் பட்டன அல்லது பலிவாங்கப்பட்டன.

எனவே இன்று மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் ஒளி காட்டும் கலங்கரை விளக்கு எனப் போற்றப் படுகிற இந்தியத் தத்துவத்தின் ஓட்டை உடைத்துப் பார்த்தால் உள்ளே இருக்கும் கரு இந்துத் தத்துவம்தான்! பார்ப்பனியம்தான்!

இந்தியத் தத்துவமும், இந்தியக் கலாச்சாரமும், இந்தி மொழியும் 'இந்தியத் தேசியத்தின்' கூறுகள் என ஏற்றுக் கொள்கிறவர்கள், 'இந்தியத் தேசியத்தின்' சமூகப் பண்பாட்டு, சித்தாந்த உள்ளடக்கமான பார்ப்பனியத்தைப் பாதுகாப்பதற்கே, இந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முனைந்து நிற்கிறார்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும். இந்திய ஒருமைப்பாட்டுக்கு இந்தியத் தேசியமே உயிர்நாடி. இந்தியத் தேசியத்திற்கு இந்துத்துவமே (பார்ப்பனியமே) உயிர்மூச்சு! இந்தக் கருத்தை சோ அவர்கள் 15.2.93 துக்ளக் இதழில் ஒப்புக் கொண்டுள்ளார். அவர் தந்துள்ள வாக்குமூலம்: நாட்டை இணைப்பது மூன்று விஷயம். ஒன்று ஹிந்துயிசம்; இரண்டு அரசியல் சட்டம்; மூன்று காங்கிரஸ் கட்சி— அவர் கருத்துப்படி இந்திய ஒருமைப்பாடு என்றால் அது இந்துயிசம். இந்துயிசம்தான் அரசியல் சட்டத்திலும், காங்கிரஸ் கட்சியிலும், பா.ஜ.க. விலும் கால்கொண்டுள்ளது.

அரசியல், சமூக, கலாச்சார, சித்தாந்தத் துறைகளில் 'இந்துத்துவம்' என்கிற பார்ப்பனியமே தலைமை தாங்கும் ஆதி சக்தியாக இருப்பதால், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்ட தமிழ் மக்கள் பார்ப்பனியத்தை எதிர்க்க அணி வகுக்கும்போது, அதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பார்ப்பனர்களையும். பார்ப்பனியர்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

www.tamilarangam.net



தொண்ணூறு சதவீதமாக உள்ள சூத்திரர்களும் பஞ்சமர்களும் தங்களை 'இந்துக்கள்' என்று அழைத்துக் கொள்வதால் தங்கள் சமூக இழிநிலையை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று பொருளா? இல்லை! எனவே இந்து மதம் நடைமுறையில் பார்ப்பன மதம் என்பதே பொருந்தும். டாட்டா நிறுவனத்தின் கூலி உழைப்பாளிகள் அந்த நிறுவனத்தின் பங்காளிகளாக ஏற்கப்படுவதில்லை, அதேபோல்தான் பார்ப்பன மதத்தின் ஆதிக்கத்தில் பஞ்சமர்களும், சூத்திரர்களும், இந்துக்களாக இருக்க முடியாது. பார்ப்பனர்களுக்காக, பார்ப்பனர்களால் உருவான பார்ப்பனர்களின்மதமே இந்து மதம். பார்ப்பனர் களிடம் மண்டிக்கிடக்கும் பார்ப்பனியத்தைப் போன்றே பார்ப்பனரல்லாதாரிடமுள்ள பார்ப்பனியமும், தாழ்த்தப் பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் பகை சக்தியாக இருப் பதைப் பார்க்கிறோம். அது குறித்துத் தனியாகப் பரிசிலிப் போம்- கட்டுரையின் பிற்பகுதியில்.

ஃ ஃ ஃ

'இந்தியத் தேசியம்' என்பது இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் இந்திய மக்களிடம் உருவான ஒற்றுமை யான ஒரு பொதுத் தன்மையைக் குறிப்பதாகும். அது ஏகாதிபத்திய எதிர்ப்பில் விளைந்ததாகும் என்று வாதிடும் இடதுசாரிகளும், ஜனநாயகவாதிகளும் உண்டு. இடது சாரிகளைப் பொறுத்தவரை மார்க்சியமும், லெனினியமும் வரையறுத்தளித்த தேசிய இலக்கணத்தை ஏற்பார் களானால், 'இந்தியத் தேசியம்' என்பதாக ஒன்று இல்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அவர்கள் தமிழ்த் தேசியத்தை நேரடியாக மறுப்பதில்லை. ஆனால், இந்தியத் தேசியமே அவர்கள் இதயத்தாகம்.

தீக்கதிர், செம்மலர், தாமரை, ஜனசக்தி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் வெளியீட்டாளரின் தேசிய

www.tamilarangam.net



இனம் (Nationality) பற்றிக் குறிப்பிடும்போது 'இந்தியன்' என்றே எழுதுகிறார்கள். கோட்பாட்டளவில் 'தமிழன்', செயல்பாடு என்கிறபோது 'இந்தியன்' என்று மாறுகிற இந்த இரட்டை நிலை இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் துவக்க காலத்திலிருந்தே தொடர்ந்து வருகிற குழப்ப நிலையாகும்.

இந்தக் குழப்ப நிலையினால்தான் 'தேசிய இனங் களுக்குத் தன்னுரிமை என்பது அவற்றின் பிறப்புரிமை' என்ற லெனினியக் கோட்பாட்டைக் கல்லறைக்கு அனுப்பி விட்டு கட்சித் திட்டத்தில் 'மாநில சுயாட்சி' என்ற பெயரில் ஆணுமில்லாத பெண்ணுமில்லாத ஒரு அலித் திட்டத்தை முன்வைக்க வேண்டிய பரிதாபம் அவர்களுக்கு நேரிட்டது.

சுயநிர்ணய உரிமைத் துப்பாக்கிக் குழலால் நசுக்கப் பட்டதால்தான் சோவியத் யூனியன் சிதறியது; யூகோஸ் லாவியா உடைந்தது; செக்கோஸ்லோவாக்கியா இரண் டானது என்ற வரலாற்று உண்மைகளை அனைத்திந்திய மாநாட்டில் கூட ஒப்புக்கொள்ள மறுக்கும் மார்க்ஸிஸ்ட்டு கள், 'இந்தியத் தேசியம்' என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பில் பிறந்ததாகப் பேசுவதைக் கேட்டு வரலாற்று வல்லுநர்கள் வாய்விட்டுச் சிரிக்கிறார்கள்.

'ஜாரிசத்தை' எதிர்த்துப் போரிட்டு வென்றதால், 'சோவியத் யூனியன்' பிறந்ததே ஒழிய 'சோவியத் தேசியம்' பிறக்கவில்லை.

பாசிசத்தையும், நாசிசத்தையும் எதிர்த்து வென்ற ஐரோப்பிய தேசங்களை ஒன்றிணைக்க ஒரு ஐரோப்பிய தேசியம் பிறக்கவில்லை.

பிரிட்டனை எதிர்த்து வென்றதாகக் கூறப்படும் 'இந்தியத் தேசியம்' பிறக்கும்போதே பிளவுண்டு பாகிஸ்தான் தேசியமாகவும் இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து பங்களாதேஷ் தேசியமாகவும் மூன்றாகிப்போனது. மிச்சமுள்ள இந்தியத் தேசியத்தின் உள்ளடக்கம் இந்துத் தேசியம்தான் என்பதே நிர்வாண உண்மை. □

www.tamilarangam.net

# 2

இந்தியத் தேசியம் தொடர்பாக இப்படியொரு கேள்வி பிறக்கலாம்:

''இந்துத் தேசியமே இந்தியத் தேசியம்'' என்பதை வாதத்துக்காக ஏற்றுக்கொண்டாலும், 'மதச்சார்பின்மை' என்ற கோட்பாட்டின் வழியாக இந்துத் தேசியத்துக்கு மாற்றாக ஒரு இந்தியத் தேசியத்தை வளர்க்க முடியாதா?''

முடியாது. சார்பின்மை என்பதன் உண்மைப் பொருள் சகிப்புத் தன்மை என்பதே. சகிப்புத்தன்மை என்பது சந்தேகத் தன்மையின் மறுபெயர். மதச் சுதந்திரம், மதப் பிரச்சாரம், மத விழாக்கள் அனுமதிக்கப்படுகிற வரை, பெட்ரோலும் நெருப்பும் போல் வாழும் நிலையே நீடிக்கும் என்பதால் மதங்களின் ஒருமைப்பாட்டுக்கு உத்தரவாதம் கிடையாது என்பது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம் மாற்று மதச் சகிப்புத் தன்மையும், சகோதரத் தன்மையும் இந்து மதத்திற்கு உடன்பாடான அம்சங்களே ஒழிய முரண்பாடுகள் அல்ல என்று காஞ்சி சங்கராச்சாரியாரே கூறி விட்டார். மாற்று மதத்தின் சில கூறுகளை ஏற்றுக்கொண்டு, தனது மூலக் கூறான சாதியத்தைச் சகோதர மதத்தின் மீது திணித்து விடுவது இந்து மதத்தின் வரலாறாகும். இந்து மதத்தின் பிரதிபலிப்பாக சாதிகளை ஏற்றுக் கொண்டுதான் சீக்கிய மதம் ஜீவிக்கிறது. கிறித்துவத்திலும் அப்படியே. மதம் மாறிய கிறித்துவர்களில் பெரும்பாலோர் வர்ண சாதி

www.tamilarangam.net



களாகவே பிளவுபட்டு வாழ்கின்றனர். சாதிகளைத் தாண்டிய திருமணங்கள் எளிதில் நடைபெறுவதில்லை. இந்து மதத்தின் வர்ண சாதி வடிவம் இந்தியாவின் இஸ்லாமியச் சமயத்தில் இல்லை என்பது ஒரு ஆறுதலே. அதற்கான வரலாற்று கலாச்சாரக் காரணங்கள் வலு வானவையாகவே இருந்திருக்க வேண்டும்.

ஆனால் சமீப கால இஸ்லாமிய மத மாற்றங்களுக்குட் பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் திருமணச் சம்பிரதாயச் சமூக உறவுகள் இந்து சாதி எல்லைகளை மீறியுள்ளனவா, அகமண முறையே நீடிக்கிறதா என்று ஆய்வது பயனுள்ள தாக இருக்கும்.

பௌத்த மத மாற்றத்தில் ஈடுபடுவோர் பெரும் பான்மையும் தலித்துகளாகவே இருப்பதால், இந்தியப் பௌத்தத்தில் சாதி அடையாளங்கள் மறைந்து விட்டன என்று இன்றைய நிலையில் கூறுவதற்கில்லை.

இந்திய மயமாக்கல் (Indianisation) என்ற பெயரில் இந்து மதம்தான் பிற மதங்களில் ஊடுருவி நிற்கிறது என்பதால், மதச் சார்பின்மை என்ற கோட்பாட்டைப் பார்ப்பனிய மநம் தனக்கே உரிய பொருளில் அதைத் தழுவிக் கொள்கிறது. 'உண்மையான மதச் சார்பின்மையை நாங்கள் ஏற்கிறோம்' என்று ஆர்.எஸ்.எஸ்., பாரதீய ஜனதா ஆகிய கட்சிகள் கூறுவதன் உட்பொருள் இது தான்.

எனவே, இந்துத் தேசியம் என்ற இந்தியத் தேசியத் திற்கு மதச்சார்பின்மை ஒரு மாற்றுத் தேசியமாகாது.

மதச் சார்பின்மை என்ற கோட்பாடு, ஒரு தேச அளவிலோ ஒரு நாட்டளவிலோ சுருங்கி விடுவதல்ல. அது சர்வதேசியத் தன்மையுடையது. எனவே இந்தியாவின் பன்முகமான தேசங்களில் மலர்ந்து வரும் தேசிய இனங்

www.tamilarangam.net



களின் உருவாக்கத்தில் மதம் மறைய வேண்டும் அல்லது தேசிய இன உழவின் குறுக்குச் சாலில் மதம் கரைய வேண்டும்.

வங்கதேச விடுதலையில் மத உணர்வை மறுத்துக் கொண்டுதான் இன உணர்வு வெற்றி கண்டது.

வர்க்கப் போராட்டங்கள் இந்திய அரசுக்கு எதிரான பொதுத்தன்மை கொண்டிருப்பதால், வர்க்க ஒருமைப்பாடு இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஆதாரமாக அமையும் என வாதிடப்படுகிறது.

அனைத்திந்திய அளவிலான வர்க்கப்போர் என்பது என்றுமே சாத்தியமில்லை என்று ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தொலைநோக்குத் திட்டம்— Perspective Tactical Line (P T.L) 1951ஆம் ஆண்டிலேயே தீர்மானித்து விட்டது. அந்தத் திட்டத்தைத்தான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 1968இல் கொச்சி மாநாட்டில் தனது கொள்கை அறிக்கையாக (Statement of policy) ஏற்றுக் கொண்டுள்ளது. இன்றைய சி.பி.எம். கட்சியில் 99.99 சதம் பேருக்கு இந்த உண்மை தெரியப்படுத்தப்படுவதில்லை— வகுப்புகளில் கூட.

இந்தியப் புரட்சியும், இந்திய ஒருமைப்பாடும் ஒன்று சேர்ந்து இயங்க இயலாது (Indian Revolution and India's integration cannot go together) என்ற உண்மையை தெளிவாக்கியுள்ள தொலைநோக்குத் திட்டத்தை— அதிகாரி அவர்களால் தொகுக்கப்பட்டுள்ள 'இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரம்' (History of C.P.I) என்ற நூலின் முதல் தொகுப்பில் படித்தறியுமாறு கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்திந்தியப் புரட்சியை நிராகரித்து இந்திய ஒருமைப்பாட்டுக்குச் சவாலாக நிற்கும் அந்தத் தொலை

www.tamilarangam.net



நோக்குக் கொள்கை (P.T.L.) அறிக்கையை ஓசைப் படாமல் திருத்தி சி.பி.எம். கட்சியின் 14வது மாநாடு சென்னையில் முடிவெடுத்திருக்கிறது. இந்தத் திருத்தத்தின் உள்நோக்கம் என்னவென்றால் அனைத்திந்திய ரீதியில் ஒரு புரட்சி நிகழும் வரை, பிரதேச ரீதியில் தேசிய இனப் பகுதிகளில் (அல்லது மாநிலங்களில்) வெடிக்கும் பகுதிப் புரட்சியைப் 'பிரிவினைவாதம்' எனப் பழி தூற்றி, 'பயங்கரவாதம்' எனப் பட்டம் கட்டி, பெரு முதலாளித்துவக் கட்சிகளோடு சேர்ந்து கொண்டு இந்திய ஒருமைப் பாட்டைப் பாதுகாப்பது என்ற பெயரால் முதலாளித்துவ சித்தாந்தத்தைத் தூக்கிப் பிடித்து, புரட்சிக்குத் துரோக மிழைத்து, நாடாளுமன்றக் கட்சியாக மட்டுமே செயல் பட்டுக் கொண்டு, ஆளும் வர்க்கங்களோடு பதவிகளைப் பகிர்ந்து கொண்டு, வர்க்க அமைப்புகளையும் வெகு ஜன அமைப்புகளையும் சித்தாந்த ரீதியாகக் காயடித்து விட்டுக் காலம் தள்ளுவது என்பதேயாகும்.

1969 முதல் அயோத்தி நெருக்கடி வரை மத்திய அரசை நெருக்கடியிலிருந்து மீட்டு வந்தவர்கள் மார்க்ஸிஸ்ட்டுகளும் கம்யூனிஸ்ட்டுகளுமே. பஞ்சாப், காஷ்மீர், அசாம் பிரச்சனை முதல் ஈழப் பிரச்சனை வரை இந்திய ஒருமைப்பாட்டின் பெயரால் புரட்சிக்குத் துரோக மிழைத்தவை மார்க்சிஸ்ட் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியுமே.

காஷ்மீரிலும், பஞ்சாபிலும், அசாமிலும், சிக்கிமிலும், ஒரிஸாவிலும், மராட்டியத்திலும், கோவாவிலும், தமிழகத்திலும் இன்னும் பிற மொழிவழித் தேசிய இனப் பகுதிகளிலும், வங்கம் கேரளம் உட்பட, தேசிய இன எல்லைகளைக் கடந்த வர்க்கப் போராட்டங்கள் என்பன வெறும் ஆசைக் கனவுகளாகவே அடங்கிப் போயின. எப்போதாவது மாமாங்கத்துக்கொரு முறை பெருமுயற்சி எடுத்து நடத்தப் படும் அனைத்திந்திய பந்த் அல்லது வேலைநிறுத்தம்

www.tamilarangam.net


என்பன கூட அந்தந்த மாநிலத்தில் உள்ள இடதுசாரி கட்சிகளின் பலாபலத்தை வைத்து ஏதோ சில மாநில அளவிலான இயக்கமாக மட்டுமே முடிவுறுமே ஒழிய, அனைத்திந்திய தன்மையை— இந்திய பூகோள எல்லைகளை அவை என்றுமேஎட்டியதில்லை. கடுமையான ஒத்திகைக்குப் பின் நடத்தப்படும் ஒரு நாடகம் போல (Stage Managed) அது தோற்றமளிக்கும். இயல்பான தன்முனைப்பும், தன்னெழுச்சியுமிக்க ஒரு தேசிய இனத்தின் எழுச்சியாக இடதுசாரிகளின் 'இந்தியத் தேசியம்' வர்க்கப் போராட்ட வடிவிலும் எழுச்சி கொண்டதில்லை.

ஏனெனில் இந்தியத் தேசியம் இயற்கைக்கு எதிரானது; எனவே இயக்க இயலுக்கு எதிரானது; எனவே வரலாற்றியலுக்கு எதிரானது.

டாட்டாக்களின் வேட்டைக்கும், டாலரின் கொள்ளைக்கும் 'இந்தியத் தேசியம்' மிக ஏற்புடையதாக இருப்பதால் அது புரட்சிக்கு எதிரான தேசியம்; எனவே பூர்ஷ்வாத் தேசியம்!

இந்த பூர்ஷ்வாத் தேசியத்தை முறியடிக்கும் 'புரட்சிகரத் தேசியம்' தமிழ்த் தேசியம், தெலுங்குத் தேசியம், பஞ்சாபித் தேசியம், காஷ்மீர்த் தேசியம் போன்ற மொழி வழித் தேசிய இனங்களின் தன்னுரிமைப் போர்தான்.

இந்திய மைய அரசுக்கும் மக்களுக்குமான முதன்மை முரண்பாட்டில் மக்களின் சார்பில் நின்று இந்த முரண்பாட்டைத் தீர்க்கும் கோட்பாடும் செயல்பாடும் தேசஇனத்தின் தன்னுரிமைப் போர் ஒன்றேயாகும். லெனினிய நெறியில் ஒரு உண்மையான கூட்டரசு அமைவதற்கான முன் தேவை தேசிய இனங்கள் தன்னுரிமை பெறுதல்தான். தமிழ்த் தேசியத் தன்னுரிமை இயக்கம் என்பது இந்திய மார்க்சியத்தின் தர்க்க ரீதியான விளைவு. இந்தக் காலக் கட்டத்தில் இந்த மைய முழக்கத்தைப் போர் உத்தியாக (Strategy) கையில் ஏந்தாதக்கட்சி மார்க்சியத்துக்கும் மக்களுக்கும் துரோகமிழைக்கும் கட்சியாகும்.

www.tamilarangam.net



தமிழ்த் தேசியம் மற்றும் அதே போன்ற மொழி வழித் தேசியங்களும் அவற்றின் தன்னுரிமை இயக்கங்களும்தான் இன்றைய காலகட்டத்தில் புரட்சிகர உள்ளடக்கம் கொண்டவையாக இருக்க முடியும்.

தமிழ்த் தேசிய இனத்தின் தன்னுரிமை இயக்கத்தின் ஊடாகத்தான் வர்க்கப் போராட்டங்களையும், வகுப்புரிமைப் போராட்டங்களையும் வளர்த்தெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்தியத் தேசியத்துக்கு மாற்றாக வேறொரு தேசியக் கோட்பாடு இடதுசாரிகளிடம் இல்லாத காரணத்தால், பெரும் முதலாளிகளின் சித்தாந்த ஆயுதமான இந்தியத் தேசியத்திடமே இடது சாரிகள் இன்றுவரை சரணடைந்து கிடக்கிறார்கள். இந்தச் சரணாகதி நிலையிலிருந்து பார்க்கும் போது தான் அவர்களுக்குத் தமிழ்த் தேசியத் தன்னுரிமை பிரிவினைவாதமாகப்படும்.

தன்னுரிமை மாநாட்டைத் தடை செய்யுமாறு மாநில அரசைத் தூண்டும்; ஈழத் தேசிய விடுதலைப் போர் இன வெறியாகப்படும்; விடுதலைப் புலிகளைப் பாசிஸ்டுகள் என வர்ணிக்கத் தோன்றும்! பாலஸ்தீன விடுதலைக்கும் ஈழ விடுதலைக்கும் உள்ள ஒற்றுமை கண்ணுக்குத் தெரியாது.

சிவப்பெல்லாம் மஞ்சளாகத் தெரியும்.

எனவேதான் மிகத் தெளிவோடு கூறுகிறோம்: இந்துத் தேசியத்தை இதய நாடியாகக் கொண்ட இந்தியத் தேசியத்தைக் காப்பாற்ற யாராலும் முடியாது. மதங்களால் முடியாது; மதச் சார்பின்மையாலும் இயலாது; வர்க்கப் போர்களோ எல்லைகளுக்குட்பட்டவை.

இதுதான் இந்தியாவின் சொந்த வரலாறு நமக்குச் சொல்லித் தரும் பாடம். சோவியத் சரித்திரத்திலிருந்தும்.

www.tamilarangam.net



கிழக்கு ஐரோப்பிய சரித்திரத்திலிருந்தும் நாம் கற்க வேண்டிய பாடம் இது.

மக்களுக்கும் அரசுக்குமுள்ள முரண்பாட்டின் முழுமையான தீர்வுக்கு ஐந்து சிறைச் சங்கிலிகளிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும்.

அரசியல் சங்கிலி — இந்திய அரசியல் அமைப்பு

பொருளியல் சங்கிலி — பெரு முதலாளித்துவம் / நிலப் பிரபுத்துவம்

பண்பாட்டுச் சங்கிலி — இன ஆதிக்கம் மொழி ஆதிக்கம் (இந்தி—ஆங்கிலம்)

சமூகச் சங்கிலி — வர்ணாசிரம சாதி ஆதிக்கம்

சித்தாந்தச் சங்கிலி — இந்துத்துவம் அல்லது பார்ப்பனியம்

இந்த ஐந்து தளைகளிலிருந்து தேசங்களும் தேசிய இனங்களும் விடுதலை பெறுவதுதான் முற்றான முழுமையான ஜனநாயகப் புரட்சிக்கு முன்மொழிவுகளாகும்.

பொருளியல் புரட்சி முடிவுற்றால் அனைத்துச் சிக்கல்களும்—ஜாதி, மத, இனமொழி மற்றும் பண்பாட்டுச் சிக்கல்கள்—தாமாக மறைந்துவிடும் என்ற ஆதிகால குருட்டு நம்பிக்கையை மார்க்சியத்தின் பேரால் விற்றுவந்தமோசடி இனி செல்லுபடியாகாது என்பதை இந்த நூற்றாண்டின் இறுதி வரலாறு மெய்ப்பித்து விட்டது. அடித்தளத்துக்கும் (Basis— பொருளியல் கூறுகள்), மேல்தளத்துக்கும் (Superstructure- கருத்தியல் கூறுகள்) உள்ள இயக்க உறவு பற்றிய மார்க்சியப் பார்வையைத் தவறாகப் புரிந்து கொண்ட மார்க்சியவாதிகளுக்கு நவீனகால வரலாறு பாடம் புகட்டியிருக்கிறது.

சோவியத் ஒன்றியம், யூகோஸ்லாவியா, செக்கோஸ்லோவாகியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட பிரிவினைக்கு

www.tamilarangam.net



மொழி உள்ளிட்ட பண்பாட்டுக் காரணிகளும் முக்கியப் பங்கு வகித்தன.

இந்தியத் தேசிய இனங்கள் அனைத்தும் ஒரே நாளில் கிளர்ந்தெழுந்து இந்திய அரசை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கும் என நம்புவது சி.பி.எம் கூறிவரும் அனைத்திந்தியப் புரட்சி போன்ற ஒரு ஏமாற்றுத்தனமாகவே இருக்கும்.

தேசிய இனத்தின் தன்னுரிமை இயக்கம் கனிவதற் கான சூழல் உள்ள இந்தியத் தேசங்கள் பலவானாலும், சில ஆனாலும் ஒன்றே ஆனாலும் அங்கே தன்னுரிமைக் கான ஜனநாயகப் புரட்சியைத் துவக்கி வெற்றிகரமாக முடிக்க முடியும். 'அனைத்திந்தியப் புரட்சி அல்ல—பகுதிப் புரட்சியை இந்தியாவின் எந்தப் பகுதியிலும் துவக்கி வெற்றி பெற முடியும்...' என்று 1950லேயே ஸ்டாலின் கருதினார். (பார்க்க : History of CPI)

சுரண்டலுக்கெதிரான வர்க்கப் போராட்டங்களை யும், பார்ப்பனியத்துக்கு எதிரான வகுப்புரிமைப் போராட் டங்களையும் இணைத்து, ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ்த் தேசத் தன்னுரிமைப் போராக்கி மக்களைத் திரட்டும் போதுதான், இந்த மண்ணுக்கே உரிய முரண் பாடுகளின் தீர்வுக்காக இந்த மண்ணுக்குரிய மார்க்சியத்தை வளர்த்தெடுத்துச் செல்லும் வரலாற்று நாயகனாக இடது சாரி இயக்கம் வீறு கொள்ள முடியும், வெற்றிகொள்ள முடியும். ஏனைய 'இந்தியப் பாதைகள்' இறுதியில் எதிர்ப் புரட்சியாகவே முடியும்.

இந்தப் பின்னணியில் இறுதியாகக் கூற வேண்டியது:

இந்திய ஒருமைப்பாடு (Integration of India) என்ற பதப்பிரயோகத்தை விட இந்தியக்கூட்டமைப்பு(Federation of India) என்ற சொற்றொடரே தேசிய இனங்களின் உண்மையான ஒற்றுமையைச் சுட்டுவதாக அமையும்.

த—4

www.tamilarangam.net



தன்னுரிமை பெற்ற தமிழ்த் தேசத்தில் சோஷலிசக் கட்டமைப்பு— தேசிய இனங்களின் விருப்பத்தால் இணைந்த இந்தியக் கூட்டமைப்பு— என்ற தெளிவான இலக்குகள் தாம் தமிழ்த் தேசத்தின் ஜனநாயகப் புரட்சிக் கான இலட்சியங்களாக இருக்க வேண்டும்.

தன்னுரிமைப் போரை இந்தியாவின் இதர தேசிய இனங்கள் அனைத்தும் துவக்குகின்ற 'சுபயோக சுபதினம்' வரை தமிழ்த் தேசத் தன்னுரிமைப் புரட்சி காத்திருக்க வேண்டியதில்லை.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் முதுகுளத்தூரில் மூண்ட தீ, பின்னர் வெண்மணித் தீ, நெற்குப்பை நெருப்பு, திண்டிவனம், விழுப்புரம், ஆம்பூர், திருநெல்வேலி அப்துல்லாபுரம், குமரிமுனையில் மண்டைக்காடு, கொடியன் குளம் ஆக பல்வேறு இடங்களில் நடந்த களப் பலிகள், தாழ்த்தப்பட்ட தமிழர்கள் மீது பிற்படுத்தப் பட்டோரில் உள்ள பார்ப்பனியர்களின் தாக்குதல்களால் நேர்ந்தவையாகும்.

தேவர்—நாடார் மோதல், வேளாளர்— வன்னியர் மோதல் ஆகியவை பிற்படுத்தப்பட்டோருக்கிடையிலேயே பார்ப்பனிய சக்திகளை நமக்கு அடையாளம் காட்டின.

பார்ப்பனியம் என்பது பார்ப்பனர்கள் வடிவத்தில் வந்தாலும் பார்ப்பனியர்கள் வடிவத்தில் வந்தாலும் எதிர்க்கப்பட வேண்டியதே.

கீழ்ப்படியிலுள்ள சாதிகள் மேற்படியிலுள்ள சாதி யினரைப் போன்று வாழ்க்கை நெறிகளை மேற்கொள்ளும் போக்கு—பார்ப்பனியமாதல் என்ற போக்கு நெடுங்கால மாக நடந்து வருகிறது என்பது ஒரு வரலாற்றுண்மை. பார்ப்பனியமாதல் என்ற சொல் Sanskritisation என்ற

www.tamilarangam.net



ஆங்கிலச் சொல்லின் மொழி பெயர்ப்பாம். Sanskritisation என்றால் சமஸ்கிருதமயமாதல் என்றுதான் பொருள்படும். பார்ப்பனியமாதலை, சமஸ்கிருதமயமாதல் என்று ஏன் பார்ப்பனியத்தை சமஸ்கிருதத்தோடு சமப்படுத்தினார் ஆராய்ச்சியாளர் டாக்டர். எம். என். ஸ்ரீநிவாஸ் என்பதற்கு மீண்டும் விளக்கம் தேவையில்லை.

சமஸ்கிருத மொழியும், அதில் உள்ள வேதங்களும், உபநிஷத்துகளும்தான் பார்ப்பனியத்தின் ஆன்மா. எனவே பார்ப்பனியமும் சமஸ்கிருதமும் ஒன்றே என்று டாக்டர் ஸ்ரீநிவாஸ் கருதுவதில் தவறில்லை.

பார்ப்பனியமாதல் அல்லது Sanskritisation என்ற இந்த நிகழ்வு, கீழ்ப்படியிலுள்ள சாதித் தமிழர்கள், மேல் சாதியினரின் கலாச்சாரத்தை மேற்கொள்ள விரும்பி செயல்படும் போது, அத்தகையவர்கள் தங்களையறியாமலேயே தங்கள் சொந்தப் பண்பாட்டை, தமிழ் மண்ணுக்கே உரிய தொன்மை மரபுகளைக் கைவிட்டு பார்ப்பனியம் என்ற ஆதிக்கக் கலாச்சாரப் பாதிப்புக்கு ஆளாகி விடுகிறார்கள்.

பார்ப்பனியத்தின் இந்தப் பாதிப்பால்தான் பிற்படுத்தப்பட்ட தமிழர்களுக்கு தாழ்த்தப்பட்ட தமிழர்களும் ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி, பி.ஜே.பி. ஆகிய பார்ப்பனிய அமைப்புகளில் பங்கேற்பதும், தமிழர்களின் நலன்களுக்கு எதிராகச் செயல்படுவதும் நிகழ்கின்றன.

முரண்பாட்டின் மார்க்சிய விதிகளை மாவோ மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். மக்களுக்கும் அரசுக்குமுள்ள முரண்பாடு பகை முரண்பாடு. அதேபோல் பகையற்ற முரண்பாடும் உண்டு. மக்களுக்கிடையிலேயே— அரசால் ஒடுக்கப்படும் வர்க்கங்களுக்கிடையிலான— முரண்பாடு உண்டு. உதாரணமாக கூலி விவசாயிக்கும் ஏழை விவசா

www.tamilarangam.net



யிக்குமுள்ள முரண்பாடு. அது பகை முரண்பாடல்ல, பகையற்ற முரண்பாடு.

கூலி விவசாயிக்கும் ஏழை விவசாயிக்கும் பொது எதிரியான நிலப்பிரபுவுடன் உள்ள முரண்பாடு பகை முரண்பாடு.

பகை முரண்பாடுகள் வர்க்கப் போரால் தீர்க்கப்படும்.

பகையற்ற முரண்பாடுகள் யுத்தங்களால் அல்ல— யுத்திகளால், பேச்சு வார்த்தைகளால்— விட்டுக் கொடுத்தல்களால்— சமரசங்களால் தீர்க்கப்படும்.

ஒடுக்குமுறை சக்தியாகப் பார்ப்பனியம் இருப்பதால் அது ஒழிக்கப்படும் வரை அது தமிழ் மக்களின் பகை முரண்பாடே.

ஒடுக்கப்படும் தமிழர்களிடையே தோன்றும் முரண் பாடுகள்— தாழ்த்தப்பட்டோருக்கும் பிற்படுத்தப்பட்டோ ருக்கும், வன்னியருக்கும்— அரிஜனங்களுக்கும், நாடார் களுக்கும்— முக்குலத்தோர்க்கும், வேளாளர்க்கும்— செங்குந்தர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களிலேயே பள்ள ருக்கும்— பறையருக்கும், இங்ஙனம் பார்ப்பனியமாதல் என்ற நோயால் பீடிக்கப்பெற்ற ஒடுக்கப்பட்ட மக்க ளுக்கிடையே எழும் முரண்பாடுகள்— பகை முரண்பாடுகள் அல்ல. அவற்றைப் பகையற்ற முரண்பாடுகளாக்கி பொதுப் பகைவனான பார்ப்பனியத்தின் ஆதிக்க வடிவமான இந்திய அரசுக்கு எதிராகத் திருப்புவதும், பார்ப்பனிய (இந்துத்துவ) அமைப்புகளுக்கு எதிராகத் திருப்புவதும் ஜனநாயகப் புரட்சியின் தேவைகளாகும்.

கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குத் திட்டம் (Strategy) என்று அழைக்கப்படும் ஒரு இலட்சியம் இருக்கும். அந்த இறுதி இலட்சியத்தை எட்டுவதற்காக இடைக்காலத் திட்டங் களும் தேவைக்கேற்ப வரையப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கம்யூனிஸ்ட்டுகளுக்கு மட்டுமல்ல, எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் அரசியல் இயக்கங்களுக்கும் இது ஒரு பொதுப் பாதை.

தேசிய மொழிகளுக்கிடையில் சமத்துவம் என்பது இடைக்கால இலட்சியம்; தாய்மொழியே சகல துறைகளிலும் என்பது இறுதி இலட்சியம்.

புரட்சியின் கூறுகளான பொருளியல் விடுதலைக்கும், பண்பாட்டு விடுதலைக்கும் திட்டம் தீட்டுகிற பொதுவுடமைக் கட்சிகள் சாதீய விடுதலையைப் பண்பாட்டு விடுதலையின் பகுதியாகப் பார்ப்பதில்லை. அவ்வளவு ஏன், பண்பாட்டு விடுதலையே அவற்றின் போர்த் திட்டத்தில் இருப்பதில்லை. பொருளாதார விடுதலையோடு உலகம் பூரணத்துவம் பெற்று விடுகிறது என்ற பூனைக் கண்ணோட்டமே அங்கே நிலவுகிறது. தேசியத் தன்னுரிமையை ஜனநாயக இயக்கப் பிரச்சினையாகப் பார்க்க மறுக்கும் போக்கின் நீட்சிதான், சாதியப் பிரச்சினையில் வெளிப்படுகிறது.

சாதிகளின் சமத்துவத்தை நோக்கி வைக்கப்படும் திட்டங்களில் கூலி உழவர்களுக்கு நிலப்பங்கீடும் ஒடுக்கப் பட்ட சாதிகளுக்கு இட ஒதுக்கீடும் இன்றியமையாதன வாகும்.

உபரிநில மீட்சிக்கும், உழுபவனுக்கு நிலமும் பொருளியல் விடுதலையில் எத்தனை புரட்சிகரமான முழக்கங்களோ, அதே அளவு புரட்சிகரமான முழக்கம் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு இட ஒதுக்கீடு என்பதும்.

பண்பாட்டு விடுதலை இயக்கத்தில் இடஒதுக்கீடு என்ற முழக்கமும் இயக்கமும் எத்தனை சக்தி வாய்ந்தவை என்பதை மண்டல்குழு அமலாக்கத்தின்போது மேட்டுக் குடிச் சாதிகளின் எதிர்வினை இயக்கங்களால் அறிய முடிந்தது.

www.tamilarangam.net



ஆண்டைச் சாதிகளுக்குச் சமமாக நிற்க அடிமைச் சாதிகளுக்குக் கல்வியிலும், தொழிலிலும், வேலை வாய்ப்பிலும் அச்சாதிகளின் மக்கள் தொகைக்குரிய விழுக்காட்டை (98 சதம்) ஒதுக்கீடு செய்வதே சமூக நீதியாகும். சம தர்மமாகும்! இதை எதிர்ப்பது சாதிக்கொரு நீதி பேசும் மனுதர்மமாகும்! மனு தர்மத்துக்கும் மனித தர்மத்துக்குமான இந்தப் போரில் மார்க்சிஸ்டுகள் மண்டல் கமிஷன் பற்றிக் கருத்தே கூறாமல் நெடுங்காலம் மனு தர்மத்தின் பக்கமே நின்றார்கள். இன்றளவும் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை முழுமையாக ஏற்காமல் இரட்டை நிலை எடுக்கிறார்கள்.

திராவிடர் கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும் இதர முற்போக்கு ஜனநாயக அமைப்புகளும் இதற்காக நடத்தியப் போராட்டங்களுக்கு எதிரணியில் நின்று ஏளனம் பேசினார்களே யன்றி, இது ஒரு ஜனநாயகக் கோரிக்கை என்று அவர்கள் ஏற்கவில்லை.

தேசிய முன்னணி அரசு மண்டல் குழு அறிக்கையை ஒரு நெருக்கடி நிமித்தம் செயல்படுத்த முனைந்தபோது அனைத்திந்தியப் பார்ப்பனியக் கட்சிகளுக்கும், பார்ப்பனக் கட்சிகளுக்கும் சோதனை வந்தது. பார்ப்பனக் கட்சியான பி.ஜே.பி. எதிரணியில் நின்றது. பிற அனைத்திந்தியக் கட்சிகளில் காங்கிரஸ் எதிரணியில் நின்றது. சி.பி.எம். ஊருக்கொரு நிலை எடுத்து ஊசலாடியது. சி.பி.ஐ. கட்சி சரியான முடிவெடுத்தது.

ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை குஜராத்திலும் ஒரிசாவிலும் கர்னாடகத்திலும் இருந்த அதன் மாநில அரசுகள் மண்டல் கமிஷனை எதிர்த்தன. உத்திரப் பிரதேசத்தின் முலாயம் சிங் யாதவும், பீகாரிலுள்ள லல்லு பிரசாத்யாதவும் ஆதரித்தார்கள். இறுதியில் பீகார்

www.tamilarangam.net



மட்டுமே உறுதியான ஆதரவாளர் என்ற நிலை ஏற்பட்டது.

இதில்கூட அனைத்திந்திய அளவில் ‘இந்தியத் தேசியம்’ என்ற பண்பு முகிழ்க்கவில்லை. தமிழ்த் தேசத்தில் மக்கள் உறுதியாக நின்றனர். அன்று பெரியார் இட்ட சமூக நீதி விதை சாய்க்க முடியாத ஆல விருட்சமாகத் தமிழகத்தில் வீடு தோறும் விழுது விட்டிருந்ததால், மண்டலுக்கெதிராக வட நாட்டைக் கலக்கிய மேல் சாதிப் போராட்டம் தமிழ் நாட்டின் விளிம்பைக் கூட ஸ்பரிசிக்க முடியவில்லை.

தந்தை பெரியார் அவர்களின் (19-12-73) கடைசிச் சொற்பொழிவை ‘மரண சாசனம்’ என்று தலைப்பிட்டே திராவிடர் கழக நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. அதில் அவர் கூறுகிறார்: ‘‘சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை என்ன தெரியுமா?

ஐந்து கொள்கை: கடவுள் ஒழிய வேண்டும்; மதம் ஒழிய வேண்டும்; காங்கிரசு ஒழிய வேண்டும்; காந்தி ஒழிய வேண்டும்; பாப்பான் ஒழிய வேண்டும்.’’

அவர் கோரிக்கை முரட்டுத்தனமாகத் தெரிவதால் அவர் கொள்கையையும் அப்படியே புரிந்து கொள்ளக் கூடாது. ‘கடவுள் ஒழிய வேண்டும்’ என்றால் கோயில்களை இடிக்க வேண்டும் என்பதல்ல பொருள். கடவுள் நம்பிக்கை ஒழியவேண்டும் என்பதே பொருள். ‘மதம் ஒழிய வேண்டும்’ என்றால் மதநம்பிக்கைகள், மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும் என்று பொருள்படும். மதத்தைப் பின்பற்றுபவர்கள் ஒழிய வேண்டும் என்பதல்ல. ‘காங்கிரஸ் ஒழியவேண்டும்’ என்றால் காங்கிரஸ்காரர்களை அழிக்க வேண்டும் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. காங்கிரஸ் என்ற கட்சியை ஒழிக்க வேண்டும் என்கிறார். ‘காந்தி ஒழிய வேண்டும்’ என்பதும் கூட அதே போலத்தான். காந்தி என்ற நபரைத் தீர்த்துக் கட்ட

www.tamilarangam.net



வேண்டும் என அர்த்தப்படுத்தினால் அபத்தம். காந்தியின் கொள்கைகள் ஒழிய வேண்டும் என்பதே பெரியார் வாதம். ''பார்ப்பான் ஒழிய வேண்டும்'' என்பதையும் அந்த வகுப்பைச் சேர்ந்த அத்தனை பேரையும் பூண்டோடு அழித்து விடுவது என்று பொருள் கொள்வது பிழையாகும். ஹிட்லரின் யூதக் கொலை போன்ற ஒரு படுபாதகத்தையே பார்ப்பனர் விஷயத்திலும் பெரியார் விரும்பினார் என்று பெரியாரைப் புரிந்தவர்கள் யாரும் பேசமாட்டார்கள். அரசியல், பொருளியல், பண்பாட்டியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் வேரோடிக் கிடக்கும் பார்ப்பன ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய வேண்டும் என்பதே அவர் இலட்சியம்.

பார்ப்பன ஆதிக்கத்தின் ஆணி வேரை அறுத்தெறியும் கோட்பாடுதான் இடஒதுக்கீடு என்பது. ஆலயத்தின் அர்ச்சகர் தொழிலிலிருந்து ஆளுகிற ஆட்சித்துறை வரை வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனர்களின் மற்றும் மேல் சாதிக்காரர்களின் ஜனத்தொகை விழுக்காட்டுக்கேற்றவாறு இடங்கள் ஒதுக்கப்பட்டால்தான் சூத்திரர்களும், பஞ்சமர்களும் 90 சதம் இடங்களைப் பிடிக்கவும், பார்ப்பன ஆதிக்கத்தின் அஸ்திவாரத்தை முற்றாக இடிக்கவும் முடியும். இதன் மூலம் சாதிகளின் சமத்துவம் எட்டப்படுவதால், 'பார்ப்பனியத்தின் பாதிப்பும் மற்றவர்களிடம் உதிர்ந்து போகும்.

தமிழ்ப்பற்று, தமிழினப்பற்று, வர்ணாசிரம தர்மம் ஒழிப்பு ஆகிய கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் பார்ப்பனர்கள் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் பங்குபெறத் தகுதி பெற்றவர்களாவார்கள். முதலாளித்துவக் குடும்பத்திலிருந்து வந்த ஏங்கல்ஸ் மார்க்ஸிஸ்ட் ஆனது போல பார்ப்பனக் குடும்பத்திலிருந்தும் பார்ப்பனிய எதிரிகள் வரக்கூடும். அவர்களை வரவேற்கிறோம்.

www.tamilarangam.net



'Sanskritisation' எனப்படும் 'பார்ப்பன மயமாதல்' என்ற மேல்நோக்கு இயக்கப் போக்கு பார்ப்பனரல்லாதாரிடம் இருப்பது போன்றே, நடைமுறை வாழ்க்கைத் தேவைகளுக்காகப் பார்ப்பனரிடமும், மேல் சாதிக்காரர்களிடமும் கீழ்நோக்கித் திரும்பும் இயக்கப்போக்கு ஒன்றும் காணப்படுகிறது. தன்னைக் கீழ்ச்சாதியாகக் காட்டிக் கொண்டு சலுகைகள் கோருவதும் இல்லையேல் தம் சாதியைப் பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட சாதிப்பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அரசைக் கோருவதும் இன்று அன்றாடக் காட்சிகள்.

சபரிமலை அய்யப்பன், சமயபுரம் மாரியம்மன், மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி போன்ற பார்ப்பனரல்லாதார் தெய்வங்களின் பக்தர்களாகப் பார்ப்பனர்கள் மாறி வருவதும், பார்ப்பனரல்லாதாரின் உணவுப் பழக்கங்களை ஏற்று வருவதும், புலால், மது போன்ற பழக்கங்களால் பார்ப்பனக் கலாச்சார மறுப்பில் ஈடுபடுவதும், பார்ப்பன மயமாதல் என்ற இயக்கப்போக்குக்கு எதிரான போக்காகப் பார்க்க முடிகிறது.

பார்ப்பனமயமாதலுக்கான இந்த எதிர்வினைப் போக்கு, தம் கலாச்சாரத்தை உதறி விட்டுக் கீழ்த்தட்டுச் சாதியுடன் சங்கமிப்பது (Qualitative Change) என்ற பண்பு மாற்றமாக அது உருப்பெறவில்லை எனினும், வரலாற்றில் இந்தப்போக்கு அழுத்தமாகப் பதிவாகி வருவதை கூர்ந்து கவனித்தாக வேண்டும்.

Desanskritisation அல்லது Dravidianisation பார்ப்பனீயத்திலிருந்து இறங்கல் அல்லது திராவிடமயமாதல் என்று இந்த எதிர்வினைப் போக்கை அழைக்கலாம்.

பாட்டாளி வர்க்கமற்ற பிற வர்க்கங்களைச் சார்ந்தவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கங்களில் பங்கேற்க முன்வருதல் நடைபெறுவதுண்டு. அத்தகையவர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் வர்க்கத்துக்குரிய கருத்தையும் குணத்தையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கைவிட்டு, பாட்டாளி வர்க்கக் கருத்தை, கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த மாற்றத்தை Declass ஆதல்-தான் சார்ந்த வர்க்கத்திலிருந்து விடுபடுதல் என்று மார்க்சிய இலக்கியங்கள் பெயர் சூட்டும்.

பார்ப்பனியமாதல் என்ற போக்கின் எதிர்வினைப் போக்கை (De-Brahminisation) பார்ப்பனியமிழத்தல் என்றும் அழைக்கலாம்.

Declass—வர்க்க நிலையிழத்தல்—என்பது போன்றே, Decaste—சாதியிழத்தல்—என்ற நிலைப்பாட்டை நோக்கிய சனநாயக இயக்கத்தில் Debrahminisation— பார்ப்பனிய மிழத்தல்—என்பது இடைநிலைப்படி. சாதி இழத்தல் என்பதே இறுதி நிலைப்படி. பார்ப்பனியமிழத்தல் என்பது சாதிகளின் சமத்துவம் (Equality of castes) என்ற இடை நிலைக்கோட்பாட்டின் அடித்தளமாகும்.

சாதிகளின் சமத்துவத்தை எய்துவதற்கு இடஒதுக்கீடு என்பது ஏணிப்படி என்பதை முன்னரேகண்டோம். பார்ப் பனர்களிடமும் பார்ப்பனியர்களிடமும் மண்டிக்கிடக்கும் பார்ப்பனியச் செல்வாக்கை உடைத்தெறியவும், பார்ப்ப னர்களின் மேலாதிக்கப்பிடிப்பை வெட்டிக் குறுக்கி, அவர் தம் மக்கட்தொகைக்குரிய பங்கை மட்டுமே அளிக்கவும், இடஒதுக்கீட்டுக் கோட்பாடு (மண்டல் அளவுகளையும் தாண்டி) அதன் உண்மையான பொருளில், முழுமையான அளவில் அமுலாக்·ப்போரிடுதலே ஜாதிகளை ஒழிக்க முனையும் ஜனநாயக இயக்கத்தின் முன்னுள்ள பெரும் கடமையாகும். பினாமி நிலங்களைக் கைப்பற்றியும்,உபரி நிலங்களைக் கையகப்படுத்தியும் நிலமற்ற உழவர்களுக்கு வழங்குவது ஒடுக்கப்பட்ட ஜாதிகளின் விடுதலைக்குப் பொருளியல் தளத்தில் ஆற்ற வேண்டிய இன்னொரு பெருங்கடமையாகும். இந்த இரு கடமைகளையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகப் பார்க்காமல் ஏதாவது ரு பக்கத்துக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்கும் அரசியல் மூக இயக்கங்கள் இன்று வரை வெற்றி பெறவில்லை,

www.tamilarangam.net



முடிவாக,

ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கத்தைப் புதிய நிலைகளும், புதிய களங்களுமே தீர்மானிக்கின்றன.

இன்றைய நிலையில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போர்தான் இந்தியச் சூழலில் ஜனநாயக புரட்சியின் முதல் கட்டமாக அமையும்.

அதற்கு,

தமிழ்த் தேசத்தின் தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை தந்தாக வேண்டும்.

பெரும் பூர்ஷ்வா நிலப்பிரபுத்துவப் பொருளியல் ஆதிக்க எதிர்ப்பு, ஆட்சி மொழிகளின் ஆதிக்க எதிர்ப்பு. வர்ணாசிரம (பார்ப்பனிய) ஆதிக்க எதிர்ப்பு ஆகிய எதிர்ப்பு முனைகளைத் தன்னுரிமைப் போரின் செருமுனை நோக்கித் திருப்புவதே இந்த மண்ணுக்கான மார்க்சியம். இதைத்தான் ஒடுக்கப்படும் தமிழர்களிடமும் சுரண்டப் படும் தமிழர்களிடமும் உண்மையான பொதுவுடைமை இயக்கம் முன்மொழிய வேண்டும்.

□

www.tamilarangam.net

# முட்டையில் கூட முடி வளரலாம்...

அது தொடங்கிய காலத்திலிருந்து 'துக்ளக்' கைத் தொடர்ந்து படித்து வருபவன் நான். 'துக்ளக்'கின் கருத்துகள் என்னை இம்மியும் பாதித்ததில்லை. ஏனெனில் சோவுக்கென்று நிலையான ஒரு கருத்து கிடையாது. ஆனால் சோவுக்கென்று நிலையான நோக்கம் உண்டு; அது என்ன என்பதைத்தான் இந்தக் கட்டுரையில் விவாதிக் கிறேன்.

□ □

இந்தியாவில், 'தேசம்' 'தேசியம்' என்ற கருத்தாக்கங் களும், தேசபக்தி என்ற உணர்வும் இந்திய அரசியலமைப்பை அடிப்படையாக வைத்து எழுந்தவையே. 1947க்கு முந்திய தேசபக்தி பாகிஸ்தானையும் உள்ளடக்கி இருந்தது. 1947க்குப் பிறகு அது பாகிஸ்தானை நீக்கிய தேசபக்தியாக மாறியது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிய எத்தனை நியாயங்களை ஜின்னா முன்வைத்தாரோ, அதே அளவு நியாயங்களை முஜிபுர் ரஹ்மான் வங்க தேசத்துக்காக முன்வைத்த போது பாகிஸ்தான் ஏற்க மறுத்தது—பாகிஸ்தான் ஒரே தேசம் என்ற அடிப்படையில்.

ஆனாலும் என்ன? 'பங்களாதேஷ்' இல்லாத பாகிஸ் தானைத் 'தேசம்' என்று ஒப்புக்கொள்ள பாகிஸ்தானிகள் மறுக்கவில்லை. பாகிஸ்தானும், வங்க தேசமும் இந்தியாவி லிருந்து பிரிந்த பிறகும் 'இந்தியா ஒரு தேசமே' என்ற நமது இன்றைய கோட்பாடு மட்டும், கார் உள்ளளவும்,

www.tamilarangam.net



கடல் உள்ளளவும், நீர் உள்ளளவும் நிலையானதா? நிரந்தரமானதா?

பஞ்சாபில் பாதியும், சிந்துவும் பாகிஸ்தானோடு சென்ற பிறகும், தாகூரின் தேசிய கீதத்தில் இன்னும் அவை நம்மோடு இருப்பதாகவே பாடிக் கொண்டிருப்பதில் உள்ள அபத்தம், இன்றைய இந்தியா இனி பிரிக்கப்பட முடியாத புனிதம் என்று நாம் நம்புவதிலும் இருக்கிறது.

ஏனெனில், நாளை அஸ்ஸாமியரும், பஞ்சாபியரும், காஷ்மீரிகளும் தங்களது இறையாண்மைக்குத் தாங்களே எஜமானர்களாக இருக்க முடிவு செய்தால், இந்திய அரசியல் சட்டம் அதை எத்தனை நாளுக்குத் தள்ளிப் போட முடியும்?

அதிகபட்சம் எழுபது ஆண்டுகள் தள்ளிப் போட முடிந்தது சோவியத் யூனியனில். தேசிய இனங்களின் குடியரசு உரிமைக்குத் தீங்கு நேராத கூட்டரசின் வெற்றிக்கு சோஷலிசக் கட்டுமானம் அடித்தளமாயிருக்கும் என்ற எதிர்பார்ப்பைப் பொய்யாக்கிவிட்டன சோவியத் ஒன்றியம், செக்கோஸ்லவேகியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகள்.

முதலாளித்துவமானாலும், சோஷலிசமானாலும் ஆட்சி முறை ஜனநாயகமானாலும், சர்வாதிகார மானாலும் தன்னுரிமை மறுப்பிலும், தேசிய இனங்களின் சமத்துவமின்மையிலும் நிற்கும் எந்த அரசும் நெடுங்காலம் தாக்குப்பிடிக்க முடியாது. இது வரலாறு.

அமெரிக்கக் கூட்டரசு தாக்குப் பிடிப்பதற்குக் காரணம், பல தேசிய இனங்களின் கூட்டரசல்ல அது. ஆங்கிலம் என்ற ஒரே மொழி பேசும் மக்கள் நிலவியல் மற்றும் நிர்வாக காரணங்களால் மாநிலங்களாக மட்டுமே பிரிந்திருக்கிறார்கள்— தமிழகத்தில் மாவட்டங்களாகப் பிரிந்திருப்பது போல. மூன்று தேசிய இனங்களின் வெற்றி

www.tamilarangam.net



கரமான கூட்டரசுக்குச் சான்றாக இன்றளவும் நீடிப்பது சுவிட்சர்லாந்து. உலகில் வேறு சில நாடுகளும் அங்ஙனம் இருக்கக்கூடும். அந்த வெற்றியின் வேர்களைக் கண்டு, அவற்றின் சாரத்தை நம் சாசனத்தில் ஏற்று சமத்துவம் பெற்ற தேசங்களின் சமஷ்டி அரசை உருவாக்கும் கருத்தைத் 'தேசத் துரோகம்' என்று டெல்லி ஆட்சியாளர் துர்வாசர்களாகிச் சாபமிட்டு, தேச இனங்களைத் தம் தாசர் இனங்களாக நடத்துகிறவரை, இந்திய அரசு எரிமலையின் மீது அமர்ந்திருப்பதாகவே கருத வேண்டும்.

சாதியையும், மதத்தையும்— மனிதன் முயன்றால் தன் வாழ்நெறிகளிலிருந்து விலக்கிவைக்க முடியும். தமிழ்மொழி அப்படி அன்று. அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிறப்பிலிருந்து இறப்பு வரை அது அவன் குருதிப் புனலாகி அணுக்களின் உயிர்ச்சத்தாகவும் ஊட்டச் சத்தாகவும் மாறிவிடுகிறது. மொழி உணர்வுதான் இன உணர்வின் உயிரோட்டம்.

குழந்தைகளுக்குத் தாய்மொழியில் அறிவியலைப் புகட்டாத எந்தச் சமூகமும் முன்னேறியதில்லை. பள்ளிச் சாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை, ஊராட்சி முதல் உச்ச நீதிமன்றம் வரை, நகராட்சி முதல் நாடாளுமன்றம் வரை, கணிப்பொறியிலிருந்து அணுப்பொறி வரை, தலையாரியிலிருந்து தலைமைச் செயலகம் வரை தாய் மொழியில் செயல்படும் சமூகம்தான் அறிவியல் ஆரோக்கியமும் அரசியல் ஆரோக்கியமும் பெற்று அனைத்து இயல்களிலும் சாதனைச் சிகரங்களை எட்ட முடியும். இதுவும் வரலாறு.

பாடத் திட்டத்திற்கப்பால் அயல் மொழிகளைக் கற்பதென்பது வேறு; பாரத ஒற்றுமைக்காக இந்தியும் ஆங்கிலமும் கற்பதென்பது வேறு. இரண்டாவது நிலைப்பாடு ஒருமைப்பாட்டுக்கும் உலை வைக்கும்; செழுமைப்

www.tamilarangam.net



பாட்டையும் சீரழிக்கும். சோவியத் ஒன்றியத்திலேயே ரஷ்ய மொழியும் ஒரு ஆட்சி மொழியாக இருந்தவரை நேசித்தார்கள். அது ஆதிக்க மொழியானதும் விரோதித்தார்கள்.

இறுதிப் பரிசீலனையில் மொழிதான் ஒரு தேசிய இனப் பண்பின் மூல வேர். அதேபோன்று தேச இனம்தான் ஒரு அரசியலமைப்பின் முடிவான அலகாகச் செயல்படுகிறது. நாளை 'இந்தியத் தேசியம்' இன்றைய வடிவில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியம், மலையாளத் தேசியம், வங்கத் தேசியம், மராத்தித் தேசியம் என்று மொழி சார்ந்த தேசியங்கள் நிலைக்கும்; நீடிக்கும்.

வாழும் மக்களைக் கணக்கிலெடுக்காமல், வெறும் மண்ணை மட்டுமே 'பாரத'மாகப் பார்க்கும் தவறுதான், இன்றைய இந்தியத் தேசியத்தின் உள் முரண்பாடு. இந்த முரண்பாட்டைத் துப்பாக்கிகள் மூலம் தீர்த்துவிட முடியும் என்ற டெல்லியின் கணக்கைத் தப்பாக்கிவிட்டது சரித்திரம்.

1947க்குப் பின் இந்தியக் கிழக்கிலுள்ள இனங்கள் மீது எடுத்த இராணுவ நடவடிக்கைகள் நானூறுக்கும் மேல் என்றால், இந்தியாவுடன் இணங்கி நிற்க 'ஏழு சகோதரிகள்' எப்படி முன்வருவார்கள்.

1967க்குப்பின் காங்கிரசின் கைவிட்டுப்போன தமிழ் நாட்டு ஆட்சி அதிகாரம் இன்றுவரை காங்கிரஸ் கைக்கு மீண்டும் திரும்பாமைக்குக் காரணத்தை எங்கே தேடப் போகிறீர்கள்? காங்கிரசோ, கம்யூனிஸ்ட்டோ வேறு எந்த அனைத்திந்தியக் கட்சியோ தமிழ் மண்ணுக்குரிய கட்சியாக இந்த மண் வாசனையோடு தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளவில்லை என்பதல்லவா காரணம்?

ஊழல்களையெல்லாம் தாண்டி நிற்கும் இந்த உண்மையைத் 'இந்திய தேசியம்' எப்படி எதிர்கொள்ளப்

www.tamilarangam.net



போகிறது? சட்டத்தாலா? சிறைகளாலா? முடியதா, நண்பர்களே முடியாது. இயற்கையான தமிழ்த் தேசியத்தின் மீது செயற்கையான இந்தியத் தேசியத்தைத் திணித்து அதனால் வரும் இரட்டைத் தேசியக் குழப்பத்தில் தன் தேசிய மதிப்பீடுகளையும் அடையாளத்தையும் துறந்துவிட எந்தத் தமிழனும் உடன்பட மாட்டான். மனித வரலாற்றின் எந்த மூலையிலும் இதற்கு முன்னுதாரணம் கிடையாது.

தேசியப் பண்பாடு (National Culture), பண்பாட்டுத் தேசியம் (Cultural Nationalism) என்ற அடைவுகளால் இந்தியத் தேசியத்தை உருவாக்கி காட்ட முனைகிறார்கள் சிலர். இந்துப் பண்பாட்டை இந்தியப் பண்பாடாகச் சித்தரிப்பவர்களின் திருவிளையாடல் இது. அவர்கள் குறிப்பிடுகிற காசி— ராமேஸ்வரம், மகாபாரதம்— இராமாயணம் இவையெல்லாம் இந்தியத் தேசிய அடையாளங்கள் அன்று; 'இந்துத் தேசிய' விழைவுகள்!

இந்துத் தேசியத்தை இந்தியத் தேசமாக ஏற்கக் கூடாதா? என்று கேட்கப்படலாம். கூடாது என்பதே பதில். கூடும் என்றால்—

கிறிஸ்துவ ஐரோப்பா ஒரு தேசமாகக் கூடாதா?
இஸ்லாம் அரேபியா ஒரு தேசமாகக் கூடாதா?
கருப்பின ஆப்ரிக்கா ஒரே தேசமாகக் கூடாதா?
புத்தமத ஆசியப் பகுதிகள் ஒரே தேசமாகாதா?

ஏன் ஆகவில்லை?

மதம், தேசிய இனப்பண்பின் கூறு அல்ல. மதமும் மொழியும் ஒன்றிப் போகிற சில இடங்களில் வரலாற்றில் மதவடிவில் இனக்கோரிக்கை எழ வாய்ப்புண்டு: சீக்கிய மதமும் பஞ்சாபி மொழியும் இணைந்த காலிஸ்தான்

www.tamilarangam.net



கோரிக்கை அத்தகையது. இஸ்லாம் துணையுடன் போஸ்னி யாவிலும், செசன்யா (ரஷ்யா)விலும் நடக்கும் இனப் போர்களும் அத்தகையவையே. ஆனால் இஸ்லாமிய ஈராக்கிலிருந்து தன்னுரிமை கோரும் குர்துக்கள் இஸ்லாமி யரே அவர்கள் குர்துமொழித் தேசிய இனம் என்பதால் குர்துஸ்தான் கோருகிறார்கள்.

மத உணர்வில் செயல்பட்டாலும், அவ்வுணர்வை மீறிச் செயல்பட்டாலும் ஒருதேசிய இனத்தின் மூலப்பண்பாக மொழியே முதலிடம் பெறுகிறது. இந்தியத் தேசியமாக இந்துத் தேசியத்தை ஏற்பதற்கு இங்கே இந்துக்கள் அனைவருக்கும் ஒரே தாய்மொழி உண்டா?

இல்லை. அப்படியானால் இந்துத் தேசியம் இந்தியத் தேசியமாக ஒருக்காலும் ஆக முடியாது.

ஒடுக்கப்பட்ட எந்தத் தேசிய இனமும் இயல்பான, தங்கு தடையற்ற முழு வளர்ச்சியை எந்தத் துறையிலும் பெற முடியாது, என்பதே வளர்ச்சியின் விதி. தென் ஆப்பிரிக்கா, பாலஸ்தீனம், சோவியத்திலிருந்த தேசங்கள் இவை எல்லாம் எத்தனையோ ஆண்டுகளுக்குப்பின் பீனிக்ஸ் பறவைபோல் மீண்டும் எழுந்து நின்று தம்மை நிலைப் படுத்திக் கொள்ளக் காரணம் மனிதனின் இயற்கை உணர் வான தாய் மொழித் தேவையும், அதைச் சார்ந்த தேசிய அடையாளத்துக்கான அவனது தணியாத வேட்கையும் தான்.

ஈழத்தில் இந்தத் தாகம் தணியாத வரை ஈழப்போர் இருக்கும். பிரபாகரனைத் தீர்த்துக் கட்டிவிட்டால் தன்னு ரிமைப் போர் சமாதியாகிவிடும் என்று சோவும், சுப்பிர மணியசாமியும், சந்திரிகாவும் போடுகிற கணக்கு முற்றி லும் பிழையானது. தேசியத்தின் சரித்திரம் (History of

www.tamilarangam.net



Nationalism) மொழியைத் தாயாக உருவகித்த முதல் நூற்றாண்டிலேயே கருக் கொண்டுவிட்டது.

தமிழ்த் தேசியத்துக்கு எதிர்ப்பு வடக்கிலிருந்து வருவது புதிதல்ல; வடமொழிக்கும் தமிழுக்குமான பனிப் போர்தான் 'திராவிட' இனப்போரின் தோற்றுவாய். வட மொழியின் இடத்தை இப்போது இந்தி எடுத்துக் கொண்டது. இருநூற்றாண்டு பாதிப்பின் காரணமாக ஆங்கிலமும் தன் பிடியை இன்னும் தளர்த்தவில்லை. எனவே தமிழ் வளர்ச்சிக்கும் தமிழாட்சிக்கும் தடைகளாக இந்தியும் ஆங்கிலமும் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள வட மொழிப் பற்றாளர்கள் இந்திக்கு ஆதரவாக நிற்பதும், ஆங்கிலம் படித்து ஊதியம் பெறுகிற நடுத்தர மேல்தர மக்கள் ஆங்கிலத்துக்கு ஆதரவு தருவதும் நடைமுறையாகி விட்டது.

இந்த இரண்டு சமூகங்களையும் புறங்கண்டு தமிழில் அறிவியல் தேடித் தலை நிமிர வேண்டிய ஏழைத் தமிழர் கள், வலுவான போட்டியைக் கண்டு மருண்டுபோய், மேட்டுக்குடிகளையே தங்கள் வழிகாட்டிகளாக ஏற்றுக் கொண்டு, தம் குழந்தைகள் ஆங்கிலப்பள்ளிகளில் ஆங்கில மும் இந்தியும் கற்க அனுப்ப வேண்டிய அவலத்துக்காளாகி யுள்ளனர். குக் கிராமங்களிலும் ஆங்கில மழலைப் பள்ளி கள் முளைப்பதன் பின்னணி இதுதான். ஆங்கிலம் படித் தால் அறிவு கிடைக்கும் இந்தி படித்தால் வேலை கிடைக் கும் என்று அப்பாவிகளை நம்பவைப்பது கொலையை விடக் கொடிய குற்றம். எதைப்படித்தாலும் வேலை கிடைக்காது. இந்தி படித்த இந்தி மாநில இளைஞர்கள் தாம் வேலையற்றோரில் அதிக விழுக்காடு.

பின் எந்த மொழி படித்தால் வேலை கிடைக்கும்? தாய்மொழியில் படித்தாலே போதும். தாய்மொழியில் தொழ்லறிவு பெற்ற தமிழர்கள் தொழில் முனைவோராக வும் வல்லுவனர்களாகவும் தொழிலாளர்களாகவும் ஈடு

www.tamilarangam.net



பட்டுத் தமிழகத்தில் தொழிற்புரட்சியும், நிலப்புரட்சியும் கொணரும் வகையில் தன்னுரிமைத் தமிழகத்தில் மக்கள் ஜனநாயக அரசு—நிறுவுவதன் மூலமே வேலையின்மைக்கு விடை கொடுக்கமுடியும். வேலைவாய்ப்புக்கான அடித் தளத்தை உருவாக்குவதில் தாய்மொழி வழிக் கல்வியின் பங்கு அளவிடற்கரியதாகும்.

பின் ஏன் இந்த உண்மை மறைக்கப்படுகிறது? தமிழ் எதிரிகளின் வேலை இது. தமிழ் அறிவியல் மொழி அல்ல என்றும் தமிழில் படித்தால் திறமைசாலியாக விளங்க முடியாது என்றும் இளைஞர்களைத் திசை திருப்பி உண்மைத் தீச்சுடரை உள்ளங்கையில் ஒளிக்க எண்ணும் தமிழ்ப் பகைவர்களின் திட்டமிட்ட வேலை இது.

தமிழ் நாட்டில் தமிழ்ப்பகைவர்கள் இருக்கிறார்களா? இருக்கிறார்கள்.

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத தமிழ்நாட்டி னர் தமிழ்ப்பகைவர்களோ என்று சந்தேகிக்க வேண்டாம். தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடர்கள், உருது பேசுவோர் இவர்களெல்லாம் வீட்டுமொழியாகப் பேசுகிற மொழி வேறானாலும், சமூக உறவும், கல்வியும், தொழி லும் தமிழிலேயே நிகழ்த்துவதால் பல தலைமுறைகளுக்குப் பிறகு இவர்கள் சாரத்தில் இன்று தமிழர்களாக மாறி விட்டனர். எனவே இவர்கள் தமிழ்ப்பகைவர்கள் அல்லர்.

பின் யார்? வீட்டிலும் வெளியிலும் தமிழே பேசினா லும் சிலருக்கு சமஸ்கிருதமே பூர்வ மொழி; சமஸ்கிருதமே வேத மொழி; வேதமே தம் சமூகவாழ்வின் இதயத்துடிப்பு; அது மறைந்துபோனால் பிறவியின் நோக்கமே பிணமாகிப் போனதாகும்— என்று இன்றும் உணர்வு பூர்வமான நம்பிக்கை இருக்கிறது. உதிரத்தில் ஊட்டப்பட்ட இந்த நம்பிக்கைதான், பிராமணர்கள் தமிழைத் தாய்மொழி யாக அரவணைக்கத் தடையாகி நிற்கிறது. தமிழைவிடவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியே சமஸ்கிருதத்துக்கு உறவுவழியில் நெருக்கமான மொழியாகத் தெரிவதால் அதை இந்தியத் தேசிய மொழி யாக ஏற்கச் சம்மதிக்கிறார்கள். ஆட்சி மொழி உரிமை டெல்லி மைய அரசில் தமிழுக்கும் தரப்படவேண்டும் என்ற கோரிக்கையைப் பார்ப்பன அறிவுஜீவிகள் வன்மையாக எதிர்க்கிறார்கள், அல்லது வாய்மூடி மவுனம் காக்கிறார் கள். அக்கோரிக்கையை அவர்கள் ஆதரிப்பதில்லை. பார்ப் பன அறிவுஜீவிகள் காட்டும் வழியிலேயே சாமானிய பார்ப்பனர்களும் தடம் மாறாமல் நடக்கிறார்கள்.

காஞ்சி மடம், அகோபில மடம் போன்ற மடங்களின் ஆன்மீக குருக்கள் பார்ப்பன சமூகங்களின் ஞானாசிரியர் களாகக் கொள்ளப்படுவதால், அவர்கள் வேதங்களின் மகத்துவத்தையும் வடமொழியின் மேன்மையையும் உபதே சிப்பது குருவாக்காக ஏற்கப்படுகிறது. தமிழின் தொன்மை குறித்தோ சங்க இலக்கியங்களின் மேன்மை குறித்தோ பிரம்மஞானிகள் பேசாதபோது, அவர்களைப் பின்பற்று வோரிடம் தமிழின் மீது பற்று எங்ஙனம் ஏற்படும்?

வைதிக மொழியும், வர்ணாசிரம நெறியும் பார்ப்பன தர்மத்தின் இரு விழிகள் எனப்படுவதால், இந்தச் சனா தன வழியில் வாழ்வோர், தமிழுக்கு அந்நியப்பட்டுப் போவது தவிர்க்க இயலாததாகும். அன்றாட வாழ்வில் தமிழர்களாகவும் அடிப்படையில் வடமொழி வேட்பாளர் களாகவும் (சமஸ்கிருதம் தெரியாவிட்டாலும்) வாழும் இந்த முரண்பாட்டை மீறித் தம்மைத் தமிழ்த்தேசிய உணர்வுக்கு உட்படுத்திக் கொண்ட தமிழர்களாக வெளிப் பட்ட பார்ப்பனர்கள் யாரும் பெரியார் கண்களில் படாத தால்தான் அன்று அவர் 'பார்ப்பனர்கள் தமிழர்கள் அல்லர்' என்ற நிலைப்பாட்டை எடுத்தார்.

இந்த நிலைப்பாடு ஏனைய பார்ப்பனர்களுக்குப் பொருந்துவதைவிட 'சோ'வுக்கு நூறு சதம் பொருந்தும்.

www.tamilarangam.net



மகாபாரதத்தின் விழுமியங்களை அதன் மூலமொழியில் படித்தறிய ஏற்படும் ஆர்வம், சிலப்பதிகாரத்தை அறிந்து கொள்வதில் அவருக்கு ஏற்படாது. 'அண்ணா சாலை' என்று மொழி மாற்றம் பெற்ற பின்னரும் 'மவுண்ட் ரோடு' என்றே தொடர்ந்து துக்ளக்கில் அச்சிட்டு வந்த பிடிவாதம், தமிழையும் தமிழ் உணர்வாளர் அண்ணாவையும் அங்கீகரிக்க மறுப்பதன் அடையாளமன்றி வேறென்ன?

பெயர்ப் பலகைகளைத் தமிழில் மாற்றக் கோரி அமைச்சர் தமிழ்க்குடிமகன் விடுத்துள்ள ஆணையைக் கேலி செய்து மகிழும் கல்கியும், விகடனும், துக்ளக்கும், கேரளத்திலும், கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும் அந்த மக்களின் மொழியில்தான் இன்னும் விளம்பரங்கள் எழுதப் படுகின்றன என்பதை அறியாதவர்களா? இந்தி மாநிலங்களில் வழக்கறிஞர், மருத்துவர் பெயர்ப்பலகைகூட இந்தியில்தான் உள்ளன. தமிழ் என்று வரும்போது மட்டும் ஏன் இவர்கள் தலைக்குள்ளே தினவெடுக்கிறது?

ஆட்சியா தமிழுக்கு மாறிவிட்டது— இல்லை வெறும் பெயர்ப்பலகைக்கு ஒரு ஆணை. அதற்கே இவ்வளவு அமர்க்களங்கள்.

தமிழில் எழுதி, தமிழர்களிடம் விற்று, தமிழால் உயிர் வாழ்கிற இந்த இதழ்கள் தமிழைக் கேலி செய்ய என்ன காரணம்? தமிழ் அவர்களுக்குப் பிழைப்பு மொழி. அவ்வளவுதான். அது ஆங்கில மொழியின் இடத்தில் அரசுக் கட்டிலில் அமரக்கூடாது. வேத மொழிக்குள்ள இடத்தை எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது. தமிழ் அவர்களுக்கு ஏவல் மொழி; காவல்மொழி அல்ல, தமிழ் அவர்களுக்குச் சேரி மொழி; சூத்திரமொழி; பிராமண மொழி அல்ல.

தமிழ் நாட்டுக்குள்ளிருக்கிற இந்த உட்பகைதான் டெல்லியின் ஆதிக்கப் பகைக்கு ஆதரவுப் படையாகச்

www.tamilarangam.net



செயல்படுகிறது. இந்தச் செயல்பாட்டை மறைக்கும் அரசியல் அரிதாரமே இந்தியத் தேசியம். இந்த 'பாரத' கவசத்துக்குள்தான் பார்ப்பனியம் பாதுகாப்புப் பெற முடியும் என்பதை நன்குணர்ந்திருப்பதால்தான், இந்தியத் தேசியக் கட்சிகள் தாம் மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி செய்ய வேண்டும் என்று இருபத்தாறு ஆண்டுகளாக எழுதி வருகிறார் சோ.

ஈழப் பிரச்சினையானாலும், புலிகள் பிரச்சினை யானாலும், இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையானாலும், இந்திப் பிரச்சினையானாலும், தமிழ் பாடமொழிப் பிரச்சினையானாலும், தமிழ் ஆட்சி மொழிப் பிரச்சினை யானாலும்— சுருக்கமாக, தமிழ், தமிழன் தொடர்புடைய எந்தப் பிரச்சினையானாலும் அவை அனைத்தும் தமிழ்த் தேசியம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் வாயில் களாகப் பார்க்கின்ற காரணத்தால் அவற்றை ஒட்டு மொத்தமாக எதிர்க்கும் ஒரு சொல் மந்திரம் 'இந்தியத் தேசியம்' தான் என்பதை சோ நன்றாக அறிவார். இது தான் பார்ப்பனர்களின் பாதுகாப்பு அரண்.

அறிவியல் மறுப்பு, பொதுவுடைமை எதிர்ப்பு, மொழி உரிமை எதிர்ப்பு, தலித் எதிர்ப்பு, பெண்ணுரிமை எதிர்ப்பு, வகுப்புரிமை எதிர்ப்பு— என்று நவீன சமூகத்தின் முற் போக்குக் கூறுகள் அனைத்துக்கும் எதிராக நிற்கும் சித்தாந்தத்துக்குப் பெயர்தான் பார்ப்பனியம். இதில் நூறுசதம் தேறியவர் சோ.

'எங்கே பிராமணன்' தொடர்கூடப் பார்ப்பனியத்தைச் சுத்தப்படுத்த எழுதப்பட்டது தான். சுத்தமான பார்ப் பனியத்துக்காக ஏங்கும் சோவிடம் சுத்தமற்ற பஞ்சமர்க்கும் சூத்திரர்க்கும் சமூக நீதி கிடைக்குமா? முட்டையில்கூட முடி வளரலாம்; சோவிடம் முளைப்பதெங்ஙனம்?

□

www.tamilarangam.net

# போர் முனையும்
# வாள் முனையும்

இது பொன்விழாதான்
சுதந்திரநாள் கருப்புநாள்
என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்
தொலைநோக்கிச் சிந்தித்த
என் பாட்டனின்
சத்திய வாக்குக்கு
இது பொன்விழா அல்லாமல்
வேறென்ன?

○

கருத்துகளைக்
கருத்துகளால்
எதிர்கொள்வதுதான்
ஜனநாயக நாகரிகம் — என்று
பொய் பேசிய போலித் தலைவர்கள்

கருத்துகளை
நெருப்புகளால் தீர்த்துக்கொள்ளும்
'நிஜத்துக்கு' இறங்கியபோது
நிர்வாணமானார்கள்.

○

www.tamilarangam.net



‘தீண்டாதவனை
ஆண்டைச் சாதி தீண்டக்கூடாது
அக்கினி மட்டுமே தீண்டலாம்’
என்று—
கால காலமாக வந்திருக்கும்
வேதியக் கருத்தின்
தொடர்ச்சிக்கு
வேர்—
மகாபாரதத்தில் இருக்கிறது.

○

அன்று
அரக்கு மாளிகையில்
பாண்டவர்க்ளுக்காக
வைத்த தீயில்
பாண்டவர்கள் சாகவில்லை
அவர்களுக்குப் பதிலாக
ஐந்து பஞ்சமர்களே
பலியானார்கள்.

○

குரங்கு வைத்த தீயில்
எரிந்தவையெல்லாம்
ஈழச்சேரிகள்தாமே
ராமாயணத்தில்?

○

உயிரோடு எரிக்கப்பட்ட
சமணர்களும்
பவுத்தர்களும் யார்?

www.tamilarangam.net



தாழ்த்தப்பட்டவர்கள் அல்லவா
சைவ வரலாற்றில்?

காஞ்சியிலும்
திருப்பெரும்பூதூரிலும்
எரிக்கப்பட்ட
ஏழைகள்
ராமானுஜரால்
பார்ப்பனராக்கப்பட்ட
பறையர்கள் அல்லவா?

○

கண்ணகி மூட்டிய
மதுரைத் தீயில்
கருகிப்போன
'தீத்திறத்தார்'
சேரி மக்களே
என்கிறது சிலப்பதிகாரம்

○

அந்தணர் இட்ட தீயில்
நாயனாரானார்
நந்தனார்
என்கிறார் சேக்கிழார்.

○

—மலம் எடுத்தான்
—பிணம் எரித்தான்
—மாடுரித்தான்
அவன் — தோலுரிக்கும்
தொழிலாளி

www.tamilarangam.net



எனப்படாமல்
'ஆவுரிக்கும்
புலையர்'
என்றார் அப்பர்.
அவர் கேவலப்படுத்தலாம்
ஏனெனில்
அவர் 'அப்பர்'
நாமோ— 'லோயர்'

○

'இழிசினர்' —என்று
தொல்காப்பிய நூற்றாண்டிலும்
'புலையர்கள்' — என்று
நாயன்மார் நூற்றாண்டிலும்
பள்ளர்கள்
பறையர்கள்
சக்கிலியர் — என்று
இந்த நவீன நூற்றாண்டிலும்

ஒடுக்கப்பட்டுக் கிடக்கும்
பண்டையத் தொல்குடியின்
மரபுவழித் தமிழ்க்குடிகள்

இதோ
இருபத்தோராம் நூற்றாண்டில்
நுழையக் காத்திருக்கிறார்கள்.
அன்று முதல் — இன்று வரை
அதே இழிவுகளோடும்—
அதே இழப்புகளோடும் —

○

www.tamilarangam.net



நான்கு வர்ணப் பிரிவிலும்
இவர்களுக்கு இடமில்லை.
எல்லா வர்ணத்திலும்
இவர்களுக்கு இடம்றுப்பு.
எனவே இவர்கள் வர்ணமற்றவர்கள்
'அவர்ணா' — என்ற
ஐந்தாம் பிரிவு.

இந்து மதத்தில்
இவன் பஞ்சமன்
கிறித்துவனானால்
இவன் பெஞ்சமின்!
பெஞ்சமின் ஆனாலும்
அங்கேயும் பஞ்சமன்
பஞ்சமனே!

○

எந்த மதமும் இவன்
சொந்த மதமல்ல.

○

சாதிப் பிரிவுகளில் இவன்
சாதியிலி — என்பது போல்
மதங்களுக்கிடையில் இவன்
மதமிலி— மதமற்றவன்!

○

'தீண்டாமை கொடுமையல்லவா?'
காலந்தோறும்
ஒரு குரல் கேட்டது.
வள்ளுவன் கேட்டான்:

www.tamilarangam.net



வள்ளலார் கேட்டார்:
ராமானுஜர் கேட்டார்:
ராமசாமிப் பெரியார் கேட்டார்
அம்பேத்கர் அடித்துக் கேட்டார்
இவ்வளவு பேருக்கும்
காந்தி ஒரு பதிலைத்
தயாராக வைத்திருந்தார்.
தீண்டாமை தீர
அவரிடம் ஒரு
அற்புதமான ஆயுதமிருந்தது.

○

காந்தி சொன்னார்
"இனி நீ பறையனல்ல:
பள்ளனல்ல;
பஞ்சமனல்ல;
இன்று முதல் நீ 'அரிஜன்'
'அரி பகவான்' குழந்தை
பெயர் மாற்றிவிட்டேன்
இனி, தீர்ந்தது தீண்டாமை"
எனக் கூறி
அவர் நூற்ற
கதர் நூலையே
பூணூலாக்கிப்
புனிதப்படுத்தி விட்டார்
அரியின் ஜனங்களை.

○

அன்று முதல்
சேரிகள் அரிஜன் காலனிகளாயின.
அக்கிரகாரங்களுக்கு அருகிலோ

www.tamilarangam.net



மேட்டுக் குடிகளின் மத்தியிலோ
அரிஜனக் காலனிகள்
முளைக்காமல் பார்த்துக்கொள்வதில்
'டெல்லியும்' 'சென்னையும்'
கவனமாக இருந்தன.
காப்பிய காலத்துப்
புறஞ்சேரிகள்
காந்தி காலத்தில்
இறுகிப் போயின.

○

அரிஜன் அரிஜனாகவே
இருந்தான்.
அய்யர் அரிஜனாக
மறுத்தான்.
சான்றிதழ்களில் மட்டுமே
இழிசாதிப் பெயரை
ஏற்கத் துணிந்தான்
இடஒதுக்கீட்டுக்காக

○

கடைசியில்
காந்தியின் சாதனை:
அரிஜனக் காலனி வந்தது
அரிஜன நலத்துறை வந்தது
அரிஜனப் பள்ளிக்கூடம் வந்தது
அரிஜனக் குழாய் வந்தது
அதில் அரிஜனத் தண்ணீர் வந்தது:
பெரும்பாலும் அதில்
அரிஜன் ரத்தமே வந்தது
○

www.tamilarangam.net



உண்மையில்
பார்ப்பனீயத்தின்
அரசியல் பெயரே காந்தியம்

○

தாழ்த்தப்பட்ட மக்களைத்
தனிமைப்படுத்துவதில்
வெற்றி கண்ட
வேதியத் தத்துவமும்
காந்திய நடைமுறையும்
கைகோத்த போது
அதன்
ஆவேசமான
எதிர்வினையாக
வெடித்தவன்தான்
அம்பேத்கர்.

○

எனவே
காந்தி இட்ட பெயரை
நிராகரித்துவிட்டு
தங்களுக்கான திருப்பெயரைத்
தாங்களே தெரிவு செய்துகொண்டார்கள்
அதுதான்: தலித்.

○

பார்ப்பனீயத்தை வேரோடு
மறு*தலி*த்தவன் *தலித்* ஆகிறான்.
மறுதலித்தவன் — மற தலித் ஆவான்.

○

www.tamilarangam.net



குலத்தால் தாழ்த்தப்பட்டவன்
தலித்!
இனத்தால் 'தலித்' ஆனவன்
தமிழன்!

○

தலித்தின்
விடுதலைக் கோட்பாடு
'தலித்தியம்'

○

தமிழனின்
விடுதலைத் தத்துவம்
தமிழியம்

○

இங்கே—
தலித்தியம் இல்லாத
தமிழியம் குருடாகும்
தமிழியத்தை ஏற்காத
தலித்தியம் மலடாகும்

○

தலித்தியத்தைக் கழித்துவிட்டுத்
தமிழியத்துக்கு விடுதலை இல்லை!

○

தமிழியத்தைப் புறக்கணித்த
தலித்தியம் வெற்றி காணாது.

○

www.tamilarangam.net



தலித்தியத்துக்குத்
தமிழியமே போர்முனை.
தமிழியத்துக்குத்
தலித்தியமே வாள்முனை.

○

அனைத்திந்தியாவிலும்
பரந்திருப்பதால்
தலித்தியத்துக்கு ஒரு
இந்தியத்தன்மை
இல்லையா?
என்று கேட்கப்படுகிறது.

○

இந்திய மக்கள் புரட்சி
இந்திய ஒருமைப்பாட்டுக்குள் இல்லை.

○

இந்திய மக்கள் புரட்சிக்கு
இந்திய ஒருமைப்பாடே
முதல் தடை.

○

'இந்தியத் தொழிலாளர்
ஒற்றுமை'— எனும் பெயரால்
கி. பி. மூவாயிரத்துக்குப்
புரட்சியைத்
தள்ளிப் போட்டுவிட்ட
இந்திய மார்க்சிஸ்ட்டுகளால்

www.tamilarangam.net



தமிழக உழைப்பினம்
எழுபதாண்டு காலம்
ஏமாற்றப்பட்டது போல்

○

இந்திய தலித்துகளின்
ஒருமைப்பாட்டை எதிர்நோக்கி
தமிழ் தலித்துகள்
தங்கள் தாயக
விடுதலைப் போரைத்
தள்ளிப் போட வேண்டாம்

○

தமிழ்த்தேச விடுதலைப் போரின்
தலைமகனே தலித் மறவன்!
அவன்—
தன் விடுதலைக்கு
மராட்டிய தலித்தின்
மஹர் வரலாற்றை
வாரிசுரிமை ஆக்கிக் கொள்வான்;

கன்னட தலித்தின்
கட்டுப்பாட்டுணர்வை
கடப்பாட்டுணர்வாக்கிக் கொள்வான்;

கன்ஷிராம் தலித்தின்
ஒற்றுமை உத்திகளைக்
கற்றுத் தேர்வான்.

www.tamilarangam.net



பஞ்சாப் தலித்தின்
இன உணர்வைப்
பாடமாக ஏற்பான்

கிழக்கிந்திய
ஆதிக் குடிகளின்
போர்த் திறங்களைப்
பயின்று
புரட்சிக்குப்
புதிய பரிமாணங்களைச்
சேர்ப்பான்.

○

பார்ப்பனியத்தின்
குருபீடம் காஞ்சி;
கொலுபீடம் டெல்லி.

○

தலித்தியத்தை
உள்வாங்கிக் கொள்ளாத
தமிழியம்,
பார்ப்பனர் கையிலும்
பார்ப்பனியர் கையிலும்
சிக்கிச் சிதையும்
சரித்திர விபத்துகளுக்கு
நூறாண்டு வரலாறுண்டு.

○

www.tamilarangam.net



அந்த விபத்தின்
விபரீதங்கள்தான்
தென் மாவட்டங்களில்
கொப்புளங்களாக
வெடித்துச்
சீழும் ரத்தமும்
வழிகின்றன.

○

ஒடுக்கப்படும்
எந்த ஆற்றலும்
உடைத்துக் கொண்டு
வெளிப்படும்
இது
இயற்பியலுக்கு மட்டுமல்ல
இயக்க இயலுக்கும்
இதுதான் விதி.

○

இந்த
அறிவியல் விதிக்கு
எதிராக
அரசியல் விதிகள்
செயல்படும் போதுதான்
கோரிக்கைகள்

www.tamilarangam.net



முறுக்கேறி நிமிர்கின்றன
அவற்றின்
கொடிக் கைகளாக
முன் நிற்கிறவர்கள்
இருவர்:
பெரியார்
பாபா சாகேப்.

○

[பெரியார் திராவிடர் கழக விழாவில் பாடியது]

□ □

www.tamilarangam.net

www.tamilarangam.net

உயர்குடிப் பிறப்பாளர்களோடு சமமாக அமர்ந்து உயர்ந்த பதவி வகித்தால்கூட, தலித்தைப் பள்ளனாகவும், சக்கிலியாகவும், பறையனாகவும் மட்டுமே பார்க்கும் பிற சாதியினரின் சமூக மதிப்பீடுதான் தலித் அடையாளம். அந்த மதிப்பீடு அழிகிற வரை தலித் அடையாளம் அழியாது. அந்த அடையாளத்தைத் தலித்தனக்குத் தானே வழங்கிக் கொள்ளவில்லை. மாற்றாரின் படைப்பான இந்தத் தழும்புக்கு (Stigma) தலித் எந்த விதத்திலும் பொறுப்பாளியல்ல. இது நீண்ட நெடிய சமூக வரலாற்றில் வெடித்த பார்ப்பனீயப் புண்.

(இந்நூல், பக்கம் 24)

அட்டைப்படம்: நன்றி - Contact

EELAN BOOKS
SIGNATURE
NORWAY